
www.tamilarangam.net

EELAM

# தமிழ் முரசு

முரசு : 4
ஒலி : 1
ஐப்பசி - 1986

அனைத்து இயக்கங்களும் இணைந்து போராடுவோம்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முரசின் பார்வையில்

தமிழ் முரசு

தமிழ்முரசு - 60

## இயக்கங்களுக்கும்....
## மக்களுக்கும்.....

நேற்றுவரை யாழ்-குடா நாட்டை வட்டமிட்ட சிறீலங்கா நவபாசிச அரசின் விமான வல்லூறுகள் இன்று மட்டுநகர் பிராந்தியத்துக்கும் தாவி குண்டுகளை விதைக்க ஆரம்பித்துவிட்டன. காற்றிலே வீசுகின்ற இந்தக் மணம் எங்கள் ஈழதேசத்தின் காயங்களிலிருந்து வரும் இரத்த வாடையையும் சுமந்து வருகிறது. இடைவிடாத 'ஷெல்' தாக்குதல்கள் அதனால் எம்மக்களுக்கு அன்றாடம் கிடைக்கும் மரண அழைப்புக்கள்.... இப்படி முடிவில்லாத சோகங்கள்... துயரங்கள் ஒருபுறம் இவற்றை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான உறுதியும், தியாகமும் வாய்ந்த போராளிகளின் உக்கிரமான போராட்டம் இன்னொரு புறமுமாக ஈழப் போராட்டம் தொடர்கிறது.

உண்மையில் ஈழப் போராட்டத்தில் நிறைய வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. மக்கள் கற்பனைக் கனவுகளிலிருந்து விடுபட்டு தாமே போராட வேண்டும் என்பதை உணர்ந்து வீதிக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். இயக்கங்கள் சூரத்தனத்தைக் காட்டுவதற்கான தங்களது நடவடிக்கைகளைக் கைவிட்டு விட்டு தேசத்தின் பாதுகாப்பு நடைக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களையினும், இதர தேசிய சேவை நடைமுறைகளிலும் தன்மை ஈடுபடுத்தத் தொடங்கிவிட்டன. வெளிநாடுகளில் சில இயக்கங்களின் முன்னணி வேலையிலும் சிலர் எப்படித்தான் கத்திக் கூச்சலிட்டாலும் ஈழத்தில் இன்று எமது பொது எதிரிக்கு எதிராக ஆயுதமாக இருந்தாலும் சரி அரசியலாக இருந்தாலும் சரி இணைந்த குரலோடு பேசவேண்டும் என்ற முன்னேற்றகரமான ஒரு சூழ்நிலை களத்திலே போராடும் இயக்கங்களிடையே உருவாகியிருக்கிறது.

ஆனால் உருவாகிவரும் இந்த ஆரோக்கியமான சூழ்நிலை ஈழப்போராட்டத்தை விரைவில் நோக்கி நகர்த்தும் என்பதைப் புரிந்து கொண்ட சில இயக்கங்களின் வெளிநாட்டுக் கிளைகளில் ஊடுருவியுள்ள பிற்போக்குச் சக்திகள் இதர இயக்கங்களுக்கெதிரான தமது கொச்சைப் பிரசாரங்களையும், வசைபாடல்களையும் தொடக்கியுள்ளன. நவீன வசதிகளும், பாதுகாப்பும் நிறைந்த அறைகளில் முடங்கிக்கிடந்து கொண்டு களத்திலே கருவி ஏந்தி கந்தகக் காற்றை சுவாசித்தபடி போராடும் உயர்ந்த போராளிகளை கொச்சைப் படுத்தி காறி உமிழ்கின்றனர். எங்கே தமது வசதிகளைப் பற்றிய இவர்களையும் ஈழவிடுதலைப் போராட்டத்தில் அமிழ்ந்து விடுமோ என்பதுதான் இவர்களது அச்சம். இந்தப் புல்லுருவிகளின் பொல்லாத நோக்கம் ஈழவிடுதலைப் போராட்டத்தில் பெரும் பாதகத்தை ஏற்படுத்தும் என்பதை எமது மக்களுக்கும், விடுதலை இயக்கங்களுக்கும் சுட்டிக்காட்டுவதுடன் இவ்விடயத்தில் தீவிர கவனம் செலுத்தும்படியும் வேண்டுகிறோம்.

www.tamilarangam.net


# ஈழம் பலமும் பலவீனமும்

-ஈழபுத்ரா-

ஈழப்போராட்டத்தை நகர்த்துவதில் இன்று ஏற்பட்டுள்ள இடையூறுகளாக எமது பலமும், பலவீனமும் தெரிகின்றன.

எமது பலம்
1. கணிசமான அளவிற்கு விடுதலை இயக்கங்கள் போராளிகளைத் திரட்டியமை.
2. பொதுஜன ஆதரவை போராளிகளின் பக்கம் திருப்பியமை.
3. பௌத்த சோவனிச ஆட்சிக்கு அச்சத்தை ஊட்டிக்கொண்டிருத்தல்.

எமது பலவீனம்
* ஐக்கியமின்மை
* குறுகிய சிந்தனைகள்.
* சுயலாபங்களிற்காகச் சோரம்போதல்
* மனித உணர்விலிருந்து அந்நியமாதல்.

இந்தக் கணிப்பீடுகள் ஏதோ இன்று புதிதாக முளைத்தவையன்று. காலாகாலமாக எமது பலம், பலவீனத்தால் சுக்குநூறாக்கப்பட்டு வந்திருக்கிறது. இந்தப்போக்குத் தொடர்ந்துகொண்டிருக்கும் வரை எம்மீதான கர்ணகடூர விமர்சனங்கள் எழுவதைத்தடுக்கமுடியாது. ஆனால் அன்று நடந்ததே இன்றும் நடக்கின்றது. இன்று நடப்பது நாளையும் நடந்துவிடக்கூடாதே என்ற எச்சரிக்கையை முற்போக்குச் சிந்தனைவாதிகள் தொட்டுக்காட்டிக்கொண்டுள்ளனர்.

ஈழப்போராட்டம் தொடர்பான தனது கருத்துக்களை ஐரோப்பியப் பத்திரிகையாளர் ஒருவர் கட்டுரை வடிவில் கொண்டுவந்தபோது, "இவர்கள் பலம் மிக்கவர்கள் தாம். ஆனால் இவர்களிடம் உள்ள பாரிய குறைபாடு ஐக்கியமின்மையேயாகும்!! என்று தனது கருத்தை முன்வைத்தார்.

எங்கள் பிரச்சனைகள் இழுபட்டுக்கொண்டுதான் இருக்கின்றன. இதில் சந்தேகமே இல்லை. கால்நூற்றாண்டுக்கும் மேலாக இவ் இழுவல் தொடருகின்றதே... காரணம் பலத்துக்கும் பலவீனத்துடனும் நடந்துகொண்டிருக்கும் யுத்தமே. பலம் வெற்றியை அறுவடை செய்யத் தயாராக நிற்கும்போது பலவீனம் வந்து அதனை அடித்துச்சென்றுவிடுகிறது. இதனால், எமது வெற்றிகளைக்கூட சரியான முறையில் மதிப்பிட முடியாமலிருக்கிறது.

www.tamilarangam.net



போராடும் இயக்கங்கள் அனைத்தும் பலம் கொண்டவைகளாக வே விளங்குகின்றன. ஆனால், இந்தப் பலம் தனது தரத்தில் மாற்றத்தைக்கொண்டுள்ளது. விடுதலை இயக்கங்களுக்கிடையேயுள் ள பலத்தைப் பலவகைப்படுத்தலாம்.

* ஆயுதபலம்.
* அறிவு பலம்.
* போர்த்தந்திரங்களை நடைமுறைப்படுத்தும் பலம்
* பொதுசன ஆதரவைத்திரட்டும் பலம்.
* நிதிதிரட்டும் பலம்.

இந்த அம்சங்கள் அனைத்தும் ஒரேயிடத்தில் குவிந்து கிடக்காமல் இருப்பதனால், பலவீனத்தின் ஆளுமை இவற்றின்மீது மிகவும் இலகு வாகி விழுந்துவிடுகிறது.

அடுத்து பலம் - விவேகம் என்ற தொடர்பில் வைத்துப் பார்க் கும்போது அங்கும் முரண்பாடுகள் தோற்றமளிக்கின்றன. பொது வாக பலம் விவேகமற்று இருப்பின் அதன் விளைச்சல்களும் பூச்சி யமாகவே இருக்கும். விவேகத்தை விட்டு விலகி நிற்றல், விவே கம் எமக்கு வேண்டாம் என்று அடம் பிடித்தல் எமது பலவீனத்தி னது இன்னொரு முகமாகும்.

சில பலவீனங்களிற்கான காரணங்களை வர்க்கரீதியில் வைத்து ஆ ராயும்போது, அவை விரும்பி எடுத்துக்கொண்ட பலவீனங்களாகி தோற்றமளிக்கின்றன, அதாவது, போர்க்களத்தில் எதிர்ப்புரட் சிச் சக்திகள் ஆதிக்கம். பாட்டாளி வர்க்கத்தைச் சுரண்டுவதும் பாமரத்தனத்தை மக்களிடையே நிலைநிறுத்தி வைப்பதும், தனிப் பட்ட நலன்களை மட்டுமே பாதுகாப்பதும் இதனது அடிப்படைக் குறிகளாகின்றன. தம்மைப் பலவீனராக்கி பிற்போக்குச் சக்திக ளிடம் தாரைவார்க்கும் இத்தன்மை முழு மனித குலத்திற்கும் எதி ரான ஒன்றாகும். பலவீனங்களை மறுதலித்து பலங்களை ஆதரிப் பதன் மூலம் தான் ஈழம் சாத்தியமென்பது நிதர்சனம். ஆனால், இது இலேசுப்பட்ட ஒரு காரியமா? இங்கே மக்களும் விமர்ச னங்களுக்குள்ளாக்கப்படுகின்றனர். அதாவது பலவீனங்களின் படா டோபங்களில் சுயபுத்தியை இழந்து, இழந்துவரும் சமூகத் தொ குதியாக அவர்கள் உருவாகிவருகின்றனர். மக்கள் முன் விழுந்து கிடக்கும் மாயத்திரைகளை விலக்குவதன்மூலமே பலவீனங்களை ம றுதலிக்கும் ஒரு சமூகத்தை உருவாக்குவதில் சிறிது வெற்றி காண முடியும்.

எமது பலவீனங்கள் எது என்பது தொடர்பான விழிப்புணர்வு அனைவரிடமும் ஏற்பட்டுவிட்டதா? உண்மையிலே ஈழத்தில் இது இன்னமும் கால் ஊன்றவில்லை. அதுவரை எமது போராட்ட மானது இழுபறிப்பட்டுக்கொண்டிருப்பதைத் தவிர்க்கமுடியாது.

www.tamilarangam.net



ஈழத்தை நேசித்தால் மட்டும் போதாது. ஈழப்போராட்டம் எப்படி நகரவேண்டுமென்பதை எல்லா இயக்கங்களும் சேர்ந்து இதய சுத்தியுடன் ஆராயவும் வேண்டும். இல்லையேல் எல்லோருமே திக்குத்திக்காய் நின்று விழலுக்கு நீர் இறைத்ததேயித்தான் முடியும்.

Jacques Prévert இவர் ஒரு பிரபல பிரெஞ்சுக் கவிஞர். 1900ஆம் ஆண்டு Neuilly இல் பிறந்த இவர் பிரெஞ்சுக் கவிதை இலக்கியத்தில் பலவித தாக்கங்களை உண்டுபண்ணியவராவர். மனிதத்தைத் துதிக்கும் வீச்சு இவரது கவிதைகள் எங்கும் பரந்து கிடப்பதைக் காணலாம். PAROLES-என்ற தலைப்பில் வெளியிட்ட இவரது கவிதைத் தொகுப்பில் இருந்து கீழ் வரும் கவிதை மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

## எனது காதலியே, உனக்காக!

நான் குருவிச்சந்தைக்குச் சென்றேன்.
எனது காதலியே,
உனக்காக நான் குருவிகள் வாங்கினேன்.

நான் பூக்கடைக்குச் சென்றேன்.
எனது காதலியே,
உனக்காக நான் மலர்கள் வாங்கினேன்.

நான் பழைய இரும்புக்கடைக்குச் சென்றேன்.
எனது காதலியே;
உனக்காக நான் சங்கிலிகள் வாங்கினேன்
மிகவும் பாரமான சங்கிலிகள்.

இவைகளின் பின்;
நான் அடிமைகள் சந்தைக்குச் சென்றேன்.
உன்னைத் தேடினேன்
ஆனால்; உன்னைக் கண்டுபிடிக்க முடியவில்லையே,
எனது காதலியே!

தமிழில்: குயில்

www.tamilarangam.net



## ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் 'ஈழம் தபால் சேவை'

ஈழவிடுதலைப் போராட்டத்தின் புரட்சிகரப் பக்கங்களை உறுதி-யுடன் எழுதிவரும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனது போராட்-டப் பாதையில் மற்றுமொரு புதிய அத்தியாயத்தை எழுதியுள்ளது. அடக்கு முறையாளரிடம் சிக்கிக் கிடக்கும் எமது தேசத்தை விடுவிப்பது மாத்திரம் நம் பொறுப்பல்ல. தேசிய சேவைகளைப் பொறுப்பேற்பதும் நமது கடமை என்று வழிகாட்டும் வகையிலே முதல் படியாக 'ஈழம் தபால் சேவை' EPRLF ஆல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 05.09.1986 அன்று நல்லூர் நாவலர் கலாச்சார மண்டபத்தில் பெரும் திரளான மக்களும் பல்வேறு அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு சம்பிரதாய பூர்வமாக இச் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது. சிறுமி ஒருவரால் ஈழம் முத்திரையின் உருவப்படம் திரைநீக்கம் செய்யப்பட்டது. 50 சதம் பெறுமதியுள்ள இம் முத்திரை சிவப்புவர்ணம் தீட்டப்பட்ட ஈழமக்களின் பாரம்பரியப் பிரதேசங்களைக் கொண்டுள்ளதுடன் பனைமரமும் சூரியோதயமும் பொறிக்கப்பட்டு 'ஈழ விடுதலைப் போராட்டம் வெல்க' என்ற வார்த்தைகளையும் தாங்கியுள்-ளது. பெருந்திரளானோர் இம்முத்திரைகளை வாங்கிச் சென்றதுடன் தொடர்ச்சியாக 'ஈழம் தபால் சேவை' வாகனங்களும், சேவையும் ஈழமக்களின் அமோக ஆதரவுடன் சிறப்பாக இயங்குகிறது.

## 'ஈழம் தபால் சேவை' குறித்து ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி:

'ஈழம் தபால் சேவை' குறித்து ஈழமக்களுக்கு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது. இவ்வறிக்கையில்.....

"...ஈழம் தபால் சேவையானது முதலில் புவியியல் ரீதியாக வரையறை செய்யப்படும் யாழ் குடாநாட்டு எல்லைக்குள் தன் சேவையைத் தொடங்கும். இச்சேவையானது இம்மாதம் 5 ம் திகதி வெள்ளிக்கிழமை முதல் சட்ட பூர்வமாக அமுலுக்கு வரும். இந்நாள் முதல் யாழ் குடா நாட்டுக்குள்

www.tamilarangam.net



நடைபெறும் தபால் பரிமாற்றங்களுக்கு ஈழம் தபால் தலைகளையும், ஈழம் தபால் அட்டைகளையுமே உபயோகித்தல் வேண்டும். இதற்குப் பதிலாக சிறீலங்கா அரசின் தபால் தலைகள் ஒட்டப்பட்ட கடிதங்களோ, தாபாலட்டைகளோ பரிமாற்றம் செய்யப்படமாட்டாது. இவை செல்லுபடி அற்றவை ஆகும். ஈழம் தபால் தலை, தபால் அட்டை இவற்றின் விலை 50 சதம் ஆகும். இவற்றை விலை கூட்டி விற்பது தண்டனைக்குரிய குற்றமாகும். ஈழம் தபால் சேவை தேசிய உணர்வின் வெளிப்பாடாகும். தேச நிர்மாணப் பணியில் தமது பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டியது ஒவ்வொரு ஈழத்துப் பிரஜையினதும் அத்தியாவசிய கடமையாகும்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சிறீலங்கா அரசின் மீது இந்திய அரசவட்டாரங்கள் கடும் ஆத்திரம்:

ஸிம்பாவேயில் நடந்த அணிசேரா மாநாட்டின் போது சிறீலங்கா பிரதமர் பிரேமதாசா, இந்தியப் பிரதமருக்கு எழுதிய கடிதத்தை முன்பக்கத்தில் போட்டு சிறீலங்கா அரசின் ஊதுகுழல் பத்திரிகைகள் ஒரு பக்கம் முழங்க, மறுபக்கம் இந்திய, சிறீலங்கா அரசவட்டாரங்களிடையே பெரும் விரிசல் ஏற்பட்டிருக்கிறது. இந்தியாவில் உள்ள ஈழப்போராளிகளின் தளங்கள் மூடப்படவேண்டும் என்றும், மீண்டும் பிரேமதாசா பழம் புராணம் பாடியதாலும் அந்தப் புராணத்திற்கு புது உரை எழுதி கைக்கூலிப் பத்திரிகைகள் வெளியிட்டுள்ளதாலும் ஆத்திரமடைந்த இந்தியப் பிரதமர் இந்தியாவில் ஈழப்போராளிகளின் பயிற்சி முகாம்கள் எதுவுமே இல்லையென தீர்க்கமாக மறுத்ததுடன் 'எங்கள் உதவி தேவை இல்லை என்றால் சொல்லுங்கள் நாங்கள் விலகிக் கொள்கிறோம்' என்று கடுமையாகவே சிறீலங்கா அரசிடம் சொல்லியுள்ளதாக தெரியவந்துள்ளது.

## மட்டு நகரில் மனிதவேட்டை! நவபாசிஸ்டுகளின் வெறியாட்டம் தொடர்கிறது:

விமானங்கள் மூலம் குண்டுகள் வீசி யாழ் மாவட்டத்தை

www.tamilarangam.net



கந்தக பூமியாக்க முயன்ற சிறீலங்கா இனவெறியாளர்கள் தமது கழுகுப்பார்வையை மட்டுநகர் மீது திருப்பியுள்ளனர். கடந்த மாதம் மட்டுநகரில் நடந்த சிறீலங்கா விமானங்களின் குண்டுவீச்சு மற்றும் இராணுவ வெறியாட்டங்கள், 400 க்கும் மேற்பட்ட அப்பாவி உயிர்களைப் பலிவாங்கியுள்ளது. அத்துடன் 1000 ஐ அண்மித்தவர்கள் அரச கூலிப்படைகளால் கைது செய்யப்பட்டுள்ளனர். அதேவேளையில் அரசபடைகளுக்கெதிரான விடுதலைப் போராளிகளின் உக்கிரமான தாக்குதல்களும் மட்டுநகரில் தொடர்கின்றன. மட்டுநகரிலுள்ள

இராணுவ முகாமைச் சுற்றி வளைத்த EPRLF இன் மக்கள் விடுதலைப் படை தொடர்ச்சியாக 10 நாட்களுக்கு மேல் முகாம் மீது பலத்த தாக்குதல் நடத்தி பெருத்த சேதத்தை ஏற்படுத்தியதுடன் முகாமின் வெளித்தொடர்புகளையும் துண்டித்துள்ளது. மட்டுநகரின் இதர முகாம்கள் மீதும், கூலிப்படைகள் மீதும் அனைத்தியக்கப் போராளிகளும் தொடர்ந்து கடும் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

## "தமிழ் மக்களது போராட்டம் நியாயமானது" — சரணடைந்த இராணுவத்தினர் தகவல் :

ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து வெளியேறி மக்களிடம் சரணடைந்து தற்போது ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பிரேமரத்தின (22 வயது), மங்களா (23 வயது) ஆகிய இரு இராணுவத்தினரும் EPRLF இன் தொலைக்காட்சி சேவையில் அளித்த பேட்டியில் தமிழ் மக்களின் போராட்டம் பற்றி, வடபகுதிக்குக் கடமைக்கு வருவதற்கு முன்னர் ஏதோ எண்ணியதாகவும், இங்கு வந்த பின்னரே அது நியாயமானதொன்று எனத் தாம் புரிந்து கொண்டதாகவும் கூறிய அவர்கள் தமக்கு விடுமுறை தருவதற்கு அநுமதி மறுக்கப்பட்டது என்றும் கூறினர். மேலும் அவர்கள் தமிழர் பிரச்சினையை வைத்து தென்னிலங்கையில் அரசியல் நடத்தப்படுகிறது. இது நெடுநாட்களுக்கு எடுபடாது என்றும் கூறியுள்ளனர்.

www.tamilarangam.net



## "சிங்கள மக்கள் எமது எதிரிகளல்ல, அரசாங்கம் தான் எதிரி" — EPRLF, PLOT கூட்டறிக்கை:

சாதாரண சிங்கள மக்கள் எமது எதிரிகளல்ல. அரசு தான் எமது எதிரி. நாம் மக்களுக்கெதிராக ஆயுதம் தூக்க மாட்டோம். இராணுவத்திலிருந்து வெளியேறும் எவரையும் காப்பாற்றி அவர்களது வீடுகளுக்கு அனுப்பிவைப்போம்.! என EPRLF உம் PLOT உம் கிளிநொச்சியில் சரணடைந்த ஆனையிறவு இராணுவ முகாம் சிப்பாய்கள் தொடர்பான கூட்டறிக்கையில் தெரிவித்துள்ளன. மேலும் "இராணுவ முகாமிலிருந்து வெளியேறுவோர் உண்மையில் உயிருக்குப் பயந்து வெளியேறுபவராக இருந்தால்தான் பாதுகாப்பளிப்போம், நாம் பயங்கரவாதிகளல்ல விடுதலைப் போராளிகள் என்பதை சரணடைந்த இரு சிப்பாய்கள் மூலம் நிரூபித்துள்ளோம்" எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## "இனவாதமே எங்கள் மூச்சுப்பேச்சு! அது இல்லையேல் நின்றுவிடும் எம் உயிர்மூச்சு!" — சிறீமாவோ.

ஈழப்போராளிகளின் புரட்சிகர விடுதலைப் போராட்டம் எங்கே சிறீலங்காவிலும் பரவி தமது பரம்பரை முதலாளித்துவ அரசியல் வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடுமோ என்ற பீதி இன்று பழம்பெருச்சாளி அரசியல் வாதிகளை பௌத்த பிக்குகளுடன் இணைந்து பச்சை இனவாதத்தைக் கக்க வைக்கிறது. அந்த இனவாதத் துளிகளில் சில.............

சிறிமாவோ பண்டாரநாயக்கா :- இனிமேலும் வடக்கில் சிங்களவர் சென்று வாழ முடியாது. அரசாங்கத்தின் சிங்கள இராணுவம் கூட தரையில் செல்லப்பயந்து வானத்தில் பறக்கிறார்கள். இப்படி வானத்தில் பறக்கும்போது சுடுகின்றார்கள். மலையகத்திலும் சிங்கள மக்கள் விரட்டியடிக்கப்படுகின்றார்கள். எனவே சிங்கள மக்கள் மலையகத்திலும் வாழமுடியாது. வடபகுதிக்கும் செல்லமுடியாது.............

www.tamilarangam.net



பரம்பரை பரம்பரையாக நாம் ஆட்சி செய்து வந்த இந்த நாட்டை அந்நியர்களுக்குத் தாரை வார்த்துக் கொடுப்பதா .............

## அரச பயங்கரவாதம் ஈழத்தில் மட்டுமல்ல, இப்போது சிறீலங்காவிலும் கூட ...............

'எங்களை நோக்கிய துப்பாக்கிகள் விரைவில் உங்களுக்கெதிராகவும் திரும்பும் எனவே அடக்குமுறைச் சட்டங்களுக்கெதிராக கிளர்ந்தெழுங்கள்' என முன்னர் ஈழமக்கள் அடிக்கடி சிங்கள மக்களை எச்சரித்தனர். இன்று அந்த எச்சரிப்பு உண்மையாகி உள்ளது. சிங்கள இடதுசாரிக் கட்சித் தலைவர்களின் வீடுகளுக்கு கைக்குண்டு வீசிய அரச குண்டர் படை இப்போது சிறீலங்கா மக்கள் கட்சி, நவசமசமாஜக் கட்சி ஆகியவற்றின் பொதுக் கூட்டங்களுக்கும் குண்டு வீசிக் குழப்பியுள்ளன. அத்துடன் சிறீலங்காவின் பல பகுதிகளிலும் பல நூற்றுக்கணக்கான சிங்கள இளைஞர்களும், யுவதிகளும் கூலிப்படைகளால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் பலர் ஈழவிடுதலை இயக்கங்களுடன் தொடர்புள்ளவர்கள் என்றும் இன்னும் பலர் ஜே.வி.பி யுடன் தொடர்புள்ளவர்கள் என்றும் கைது செய்யப்பட்டுள்ளனர். அரசின் மனித உரிமை மீறல்களை விமர்சித்து நடுநிலையாளர்களும் கைது செய்யப்பட்டு விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

## ஸ்ரீலங்கா சிறைகளில் ஈழ இளைஞர்களின் உண்ணாவிரதப் போராட்டம்! ஆக்கிரமிப்பாளனுக்கு அந்த அடி!

நீண்ட காலமாக விசாரணைகள் எதுவுமின்றி சிறையில் வைத்திருத்தல். சிறையில் இழைக்கப்படும் சித்திரவதைகள், அடிப்படை வசதிகளைக்கூட வழங்காத அரசின் குரூரத்தனம் ஆகியவற்றிற்கெதிராக வெலிக்கடை, பூஸா ஆகிய ஸ்ரீலங்கா வதை முகாம்களில் காரணம் எதுவுமின்றி நீண்டநாட்களாக தடுத்து வைக்கப்பட்ட ஈழ இளைஞர்களும், பெண்களும் நடத்திய உண்ணாவிரதப்

www.tamilarangam.net



போராட்டம் மீண்டும் இருமுறை உலகமக்களின் கவனத்தை எமது போராட்டத்தின் திசைக்கு ஈர்த்துக்கொண்டது. மேற்படி போராட்டத்தை நிறுத்த சிறிலங்கா அரசு எடுத்த முயற்சிகளுக்குப் பலியாகாது... உடல் களைத்தும் உறுதி தளராது... மூர்ச்சையுற்றும் மனம் சோர்வுறாது நூற்றுக்கு மேற்பட்டவர்கள் நடத்திய இப்போராட்டமும், இப்போராட்டத்துக்கு ஆதரவாக ஈழதேசமெங்கும் கிளர்ந்தெழுந்த மக்கள் போராட்டங்களும் ஈழ விடுதலைப் போராட்டத்தின் புரட்சிகர அத்தியாயங்கள். வண. பிரா. பாலசூரியாவின் முயற்சியாலும், வற்புறுத்தலாலும் கைவிடப்பட்டுள்ள இவ்வுண்ணாவிரதப் போராட்டம் பற்றிய செய்திகளை ஆக்கிரமிப்பாளர்கள் முற்றாகவே இருட்டடிப்பு செய்து வருகிறார்கள். சீர்குலைந்த தேகநிலையுடன் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டவர்களின் சரியான நிலை இன்னும் தெரியவரவில்லை.

## யாழ். சர்வோதயத் தலைவர் கதிரமலை கொலை! ஈரோஸ் வழங்கிய மரண தண்டனை.

21.09.86 அன்று இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்ட யாழ். சர்வோதயத் தலைவர் திரு. கதிரமலை சுட்டுக் கொல்லப்பட்டு இவரது சடலம் யாழ். பல்கலைக்கழகத்துக்கருகே மின்கம்பமொன்றில் கட்டப்பட்டிருந்ததாக 'வீரகேசரி' செய்தி தெரிவிக்கிறது. அரசாங்கத்துக்கு ஒ உளவு பார்த்தார், விடுதலை இயக்க முகாம்களைக் காட்டிக் கொடுத்தார் என்ற குற்றச்சாட்டுக்களை இவர் மீது வைத்து 'ஈரோஸ்' இயக்கம் இம் மரணதண்டனையை வழங்கியுள்ளதாக பத்திரிகை தெரிவிக்கிறது. அதே சமயம் கலவர காலத்தில் ஆக்கிரமிப்பாளரால் பாதிக்கப்பட்டு மனநிலையும் இழந்த 28 வயதுடைய கதிரமலை கொல்லப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேசமயம் மட்டுநகர் பொலிஸ் உளவாளியின் 17 வயது மகளும் அவரது சிநேகிதியும் இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டுக் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

www.tamilarangam.net

# அக்டோபர் புரட்சி தந்த அநுபவங்களுடன் ஈழப்புரட்சியை முன்னெடுப்போம்.

அக்டோபர் புரட்சியானது சோவியத் யூனியனின் பாட்டாளி மக்களுக்கு வெற்றியைத் தேடித்தந்த ஒரு நாளாகும். அக்டோபர் புரட்சியின் வெற்றியானது உலகில் பாட்டாளிவர்க்க ஆட்சிகளை பல நாடுகளில் தோற்றுவிப்பதற்கு ஏதுவாக இருந்ததனை எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

அக்டோபர் புரட்சியின் முன்னணிச் சக்தியாக விளங்கியவர்கள் ருஷ்யாவின் ஏழைத்தொழிலாளர்களாவர். இவர்கள் ருஷ்யாவின் ஏழை விவசாயிகளுடன் இணைந்து ருசியாவில் கொடுங்கோலாட்சி நடத்திவந்த ஜார் அரசுக்கெதிராக போராட்டத்திலீடுபட்டவர்களாவர். இவர்களைப் போல்சுவிக் கட்சியின் கீழ் அணிதிரட்டி போல்சுவிக் கட்சிக்குத் தலைமை தாங்கி வழி நடத்தி சோவியத் பாட்டாளி மக்களுக்கு விடியலை ஏற்படுத்திய பெருமை லெனினைச் சாரும். அன்றைய சூழ்நிலைகளுக்கேற்ப லெனின் கையாண்ட நடவடிக்கைகளும், அவற்றினால் ஏற்பட்ட நன்மைகளுமே இன்று ஏனைய சில நாடுகளில் சோசலிசம் மலர்வதற்குக் காரணிகளாக அமைந்தன.

ஜார் அரசவம்ச ஆட்சிக் காலத்தில் ஏழைப்பாட்டாளிகள் மிகக் கடுமையாக உழைத்தும் உண்ணப் போதிய உணவின்றியும் இருப்பிட வசதியின்றியும் நலிந்துகொண்டிருந்தனர். நாட்டில் ஏற்பட்ட பஞ்சத்தின் நெருக்கடியினால் அரசுக்கெதிரான ஆர்ப்பாட்டங்கள் தலையெடுக்க ஆரம்பித்தன. 1904ம் ஆண்டில் நடைபெற்ற ஜப்பானுக்கெதிரான யுத்தத்தினால் ருசியா மிகவும் பலம்குன்றிய நிலைமையை எதிர்நோக்கியது. வறுமை, வேலையில்லாத்திண்டாட்டம், பட்டினி என்பன ருசிய மக்களை மிகவும் கொடுமைக்குள்ளாகியது. இதனால் பெண்களையும் குழந்தைகளையும் உள்ளடக்கி ஒரு லட்சத்திற்கதிகமான மக்கள் தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றும்படி கோரி மௌன ஊர்வலம் நடத்தினார்கள். ஜார் அரசின் பாரிய அடக்குமுறையினால்அதிகமாக உயிரிழப்புக்களுக்கிடையில் இவ்வூர்வலம் முறியடிக்கப்பட்டது.

www.tamilarangam.net


இதனால் கொதிப்படைந்த மக்கள் 1905ம் ஆண்டு அக்டோபரில் பாரிய வேலைநிறுத்தத்தை நடத்தினார்கள். இதில் மருத்துவர்கள் அரச ஊழியர்கள் பொறியியலாளர்கள் மாணவர்கள் இணைந்து கொண்டதனால் இவ்வேலைநிறுத்தம் வெற்றிபெற்றதுடன் தொழிலாளர் பிரதிநிதிகள் சோவியத் என்ற அமைப்பை அமைத்தன. இவ் அமைப்பு தொழிலாளர்களை வழி நடாத்தியது. இவ்வமைப்பின் பலத்தைக் கண்டு பயந்த ஜார் கொடுங்கோன்மை அரசு டூமா எனப்படும் சட்டமியற்றும் சபையொன்றை உருவாக்குவது பற்றிய அறிக்கையை வெளியிட்டது. இது தொழிலாளிகளின் உரிமையைப் பாதித்ததினால் தொழிலாளர்கள் கிளர்ந்தெழுந்தனர். இவர்களை ஜார் அரசாங்கம் அரச கூலிப்படைகளைக்கொண்டு ஆயுத முனையில் அடக்க முற்பட்டபோது மக்களும் எதிர்த்தாக்குதலில் ஈடுபட்டார்கள். 1905ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் தேர்ச்சி இல்லாத நிலையிலும் மாஸ்கோ நகரத்துப் பாட்டாளி மக்கள் 9 நாட்கள் போராடினார்கள். இப்போரினால் ஜார் முடியரசு மிகவும் அச்சமடைந்தது. போதியளவு ஆயுதங்கள் இல்லாததனாலும் போதிய தேர்ச்சி இல்லாததனாலும் தொழிலாளர் போராட்டம் ஜார் அரசாங்கத்தினால் முறியடிக்கப்பட்டது.

1905 டிசம்பர் புரட்சியின் மூலம் ஆயுதப்போராட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்த லெனின் 'பாட்டாளி மக்களே புரட்சியின் முதுகெலும்பு' என்பதை உணர்ந்தார். அப்போது மக்களை ஸ்தாபன ரீதியாக ஒழுங்கமைத்துத் தயார்ப்படுத்தி போராட்டத்திற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

1914ல் ஏற்பட்ட முதலாம் உலக யுத்தத்தினால் ருசியா பலத்த பாதிப்பை அடைந்தது. ஜார் அரசும் அரச நிர்வாகமும் சீர்கெட்டுத் தடுமாறியது. இவ்வேளையில் போல்சீக் கட்சி மக்களை அரசுக்கெதிரான போராட்டத்தில் ஈடுபட வைத்தது. இதனைச் சமாளிக்கமுடியாத ஜார் அரசு இராணுவத் தளபதி ஜெனரல் கர்னிலவ்வை சர்வாதிகாரப் பதவியில் அமர்த்தியது. இதனால் மக்கள்மீது உருவாக்கப்பட்ட ஆயுதத் துன்புறுத்தலை எதிர்த்த மக்களும் ஆயுதமேந்திப் போராட முற்பட்டனர். இந்நிலையில் ருசியப் போல்சுவிக் கட்சியின் தலைமையில் லெனின் அவர்கள் அக்டோபர் புரட்சியை ஆரம்பித்தார். ருசியப் பாட்டாளி மக்களின் வீரமிகு போராட்டத்தினால் ஆட்சிஅதிகாரம் போல்சுவிக்கட்சி வசமாயை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அக்டோபர் புரட்சியினால் மனிதகுல வரலாற்றில் முதல்முறையாக பாட்டாளிவர்க்க சர்வதிகாரம் நிலைநாட்டப்பட்டது.

இந்நிலையில் ஈழவிடுதலைக்காகப் போராடும் இயக்கங்களும் சோவியத்தில் ஏற்பட்ட அக்டோபர் புரட்சியின் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு ஸ்ரீலங்கா நவபாசிச அரசுக்கெதிரான போராட்டத்தை மேற்கொள்ள வேண்டும். 'மக்களின் தன்னியல்பான எழுச்சியே போராட்டத்தின் கருவடிவம்' என்றார் லெனின். இக்கூற்றுக்கமைய இதுவரை காலங்களும் பொதுமக்கள் தாமாகவே கிளர்ந்து அரச பயங்கரவாதத்திற்கெதிரான ஊர்வலங்களை மேற்கொண்டமையும் மலையக மக்கள் தாக்கப்பட்டதற்கெதிராக மலையக மக்கள் வேலைநிறுத்தங்களை மேற்கொண்டமை, தாக்கியவர்களை எதிர்த்துத் தாக்கிய செயலையும் மிகவும் கவனத்திற்கெடுக்கவேண்டியது அவசியமாகும். அத்தோடு இழப்பதற்கு எதுவுமற்ற நிலையிலுள்ளவர்கள் மலையகத் தோட்டத் தொழிலாளர்களும் ஈழத்தின் இதர பாட்டாளி மக்களுமே என்பதைக் கருத்திற்கொண்டும் அவர்களை முன்னணி சக்தியாகக் கொண்டும் போராட்டத்தை முன்னெடுக்கும்போதுதான் ஈழவிடுதலைப் போராட்டம் வெற்றிபெறும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

வெல்க ஈழமக்கள் விடுதலைப் போராட்டம்.

— ஆதவன் —

---

தோழர்களே!

நீளமானதும், கடினமானதுமான ஈழவிடுதலை போராட்டப் பாதையில் 'தமிழ்முரசு' தனது ஓராண்டினைப் பூர்த்திசெய்து வரலாற்றுக் கடமையின் தனியான பங்களிப்பை செய்ய துணை நின்ற நீங்கள் தொடர்ந்தும் 'தமிழ்முரசிற்கு' உங்கள் கருத்து, நிதி, தார்மீக ஆதரவினைத் தருவீர்கள் என நம்புகிறோம்.

இணைந்துத் தொடர்புகொள்ளும்...

THE EDITOR
'TAMIL MURASU'
EELAM LIBARATION COUNCIL
10, RUE DES MARTYRS
75009 — PARIS.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# செல்லரிக்கும் அரசின் "ஷெல்"லடிப்பு அக்கிரமம்.

ஈழப்போராளிகளின் உக்கிரமான தாக்குதல்களால் செல்லரித்துப் போய்க்கொண்டிருக்கும் சிறிலங்க நவபாசிச அரசின் கைக்கூலிப்படைகள் போராளிகளோடு நேருக்கு நேர் நின்று போரிடும் திறமை அற்றவர்களாய் முகாம்களுக்குள் முடங்கிக் கிடந்து அப்பாவி மக்களை கொன்றழிக்கும் 'ஷெல்' அடிப்பு வீரர்களாய் திகழ்கின்றனர். கூலிப்படையினர் நடத்திவரும் இந்த 'ஷெல்' வெறியாட்டம் ஈழதேசத்தின் அன்றாட வாழ்வையே சீர்குலைத்து விட்டுள்ளன. வைத்தியசாலைகள், பாடசாலைகள், ஆலயங்கள், வர்த்தக நிலையங்கள், வதிவிடங்கள் ஆகியவற்றை நாசம் செய்தும் அப்பாவி ஈழமக்களை வேறுபாடின்றி கொன்றழித்தும் வரும் ஒரு தேசிய ஆயுதமாக சிறீலங்கா அரசு, 'ஷெல்'ஐ மாற்றிக் கொண்டுள்ளது. 'ஷெல்' கொடுமைகளை விளக்கி 'வீரகேசரி' பத்திரிகையில் வந்த ஒரு சிறு தொகுப்பு....

யாழ். மாவட்டத் தலைநகரான யாழ்நகர் அண்மைக் கால சம்பவங்களால் ஓர் "மக்கள் சூன்யப்" பிரதேசமாக மாறி வருகிறது.

யாழ்நகரில் மிக அடர்த்தியாக குடியிருந்த மக்கள் அங்கிருந்து கிராமப் பகுதிகளுக்கு குடிபெயர்வதோடு தங்கள் தேவைகளுக்காக யாழ்நகருக்கு வந்து செல்லும் மக்களின் தொகையும் மிக வேகமாகக் குறைந்து வருகிறது.

தவிர்க்க முடியாத அவசர தேவைகளுக்காக யாழ்நகருக்கு வரும் மக்கள் அவசர அவசரமாக தங்கள் காரியங்களை முடித்துக் கொண்டு நகரிலிருந்து அப்புறப்பட்டு விடவே துடிக்கிறார்கள்.

இத்தனைக்கும், யாழ்நகரில் அதிகரித்து வரும் ஆயுதப்படையினரின் "ஷெல்" தாக்குதல்களுக்கு அப்பாவிப் பொது மக்கள் பலியாவதும் காயமடைவதுமே காரணமாகும்.

யாழ். கோட்டை முகாமில் இருந்து திடீர் திடீரென ஏவப்படும் ஷெல்கள் குடிமனைகள் மீதும் வர்த்தக நிலையங்கள் மீதும் விழுந்து வெடித்து அதிலிருந்து சிதறும் சன்னங்கள் மனித உடலில் அகப்பட்ட இடத்தை ஊடறுத்துச் செல்கின்றன. ஒவ்வொரு ஷெல் குண்டும் 50 கிலோவில் இருந்து 75 கிலோ வரை நிறையுடையதாக இருக்கிறது.

www.tamilarangam.net



[illegible] உருக்கினாலான இந்த குண்டுகள் வெடிக்கும் போது பல்வேறு வடிவங்களில் கலந்த உருக்குத் துண்டுகள் மின்னல் வேகத்தில் சிதறுகின்றன.

இதுவரை ஷெல் தாக்குதலில் இருந்து தவிர்க்கப்பட்டு வந்த யாழ்நகரின் கேந்திர ஸ்தானங்களான பெரிய கடைப் பகுதி நவீன சந்தைப் பகுதி, பெரியாஸ்பத்திரிப் பகுதி, வேம்படி மகளிர் கல்லூரி, மத்திய கல்லூரி, நீதிமன்றம் ஆகியனவும் கடந்த வாரத்தில் இருந்து ஷெல் அடிக்கு தப்பவில்லை. இதற்கு முன்னர் குருநகர், கொட்டடிப் பகுதிகளிலேயே ஷெல் தாக்குதல்கள் இடம் பெற்றன.

கடந்த வார இறுதியில் மாத்திரம் யாழ். நகரில் திடீர் திடீரென விழுந்து வெடித்த ஷெல்களினால் அப்பாவிப் பொது மக்கள் 7 பேர் உயிர் இழந்தார்கள். இவர்களில் ஒரு குழந்தையும் தாயான இளம் பெண்ணும் ஒரு மணமகனும் அடங்குவர். 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று யாழ். சிவப்பிரகாசம் வீதியில் ஐயனார் கோவிலுக்கருகில் திருமண வீடு ஒன்றில் ஷெல் விழுந்ததால் மணமகன் அந்த இடத்திலே விழுந்து இரத்த வெள்ளத்தில் துடிதுடித்து மரணமானார். மணவாளக் கோலத்தில் எத்தனையோ ஆசைக் கனவுகளுடன் மணமகனாக கரம்பிடித்த மணமகளோ கழுத்தில் தாலி ஏறிய ஒரு சில மணித்தியாலங்களுக்குள் தனது கனவுகள் எல்லாம் ஒரு நொடிப் பொழுதில் தவிடு பொடியாக விதவையான சம்பவம் இப்பகுதியில் அனைவரையும் மனம் நெகிழ வைத்தது.

இதே தினத்தில் இதே முகூர்த்தத்தில் திருமணம் நடைபெற இருந்த மற்றொரு தம்பதியினரில் மணமகனின் அண்ணன் மகனான 1½ வயதுப் பாலகன் முதல் நாளே ஷெல் அரக்கனுக்கு இரையானதால் அந்தத் திருமணமும் நின்று விட்டது. மணமகளின் கரம்பிடித்து திருமண ஊர்வலத்தில் செல்ல வேண்டிய நடராசா ஜெயவர்தன என்ற இந்த 20 வயது இளைஞர் அதே தினத்தில் தனது அண்ணன் மகனின் பூதவுடலை சுமந்து அழுது புலம்பியபடி சென்ற காட்சி மக்களின் மனதை நெகிழச் செய்தது. இப்படியாக ஷெல் தாக்குதலினால் உயிரிழந்தோர், ஊனமடைந்தோர், உடமை இழந்தோர் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

இத்தகைய சூழ்நிலையில் தான் யாழ்நகரில் இன்று மக்கள் நடமாடி வருகிறார்கள். காலா காலமாக அரச சேவையில் தங்கள் காலத்தைக் கழித்து விட்டு வயோதிப காலத்தில் ஓய்வூதியப் பணத்தை வைத்துக்கொண்டு மிகுதிக் காலத்தை நிம்மதியாகத் தள்ளி விடலாம் என்று ஏங்கும் வயோதிபரும் உயிரைக் கையில் பிடித்தபடியே "பென்ஷன்" பணம் பெற கோட்டை முகாமுக்குச் செல்கிறார்கள். பென்ஷன் பெற வரிசையில் நிற்கும் வயோதிபர்கள் கோட்டைக்குள்ளிருந்து ஷெல் குண்டு வெடிக்கும் போதும் துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்கும் போதும் மயக்கம் போட்டு விழுவதையும் அவ்வப்போது கேள்விப்படுகிறோம்.

இதற்கிடையில் கோட்டை இராணுவ முகாமைச் சுற்றியும் உள்ள வீதிகளில் இளைஞர் குழுக்கள் இரவு பகலாக காவல் கடமையில் ஈடுபட்டுள்ளார்கள். கோட்டையில் இருந்து இராணுவம் வெளியேற முயலும் வேளைகளில் – அது பொழுதின் எவ்வேளையாக இருந்தாலும் எதிர்த்தாக்குதலை நடத்தி இவர்கள் இராணுவத்தை மீண்டும் கோட்டைக்குள் அடைத்து விடும் நிகழ்ச்சி இங்கு அடிக்கடி இடம்பெறுகிறது. கோட்டைக்குத் திரும்பும் இராணுவம் அங்கிருந்து தமது மனக் குமுறல்களை "ஷெல்" கணைகளை ஏவித் தீர்த்துக் கொள்கிறது.

கோட்டையில் இருந்து யாழ். நகருக்கு வரும் வீதிகள் யாவும் இளைஞர்களால் உயரமான மண் மூட்டை அரண்கள் அமைக்கப்பட்டு தடை செய்யப்பட்டுள்ளன. இதுவுமன்றி யாழ். நகரின் முக்கிய பகுதிகளான நவீன சந்தை, பெரியாஸ்பத்திரி ஆகிய இடங்களுக்கு முன் மக்களின் பாதுகாப்புக்கென மண் மூட்டை அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. சுமார் 15 அடிச் சதுரமான இந்த மண்மூட்டை அறைகள் இராணுவ வெளியேற்றத்தின் போதும், தொடர்ச்சியான "ஷெல்" தாக்குதலின் போதும் அருகில் உள்ள மக்கள் பாதுகாப்புத் தேடிக் கொள்வதற்காக என்று இளைஞர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**காசி. நவரட்ணம்**

— வீரகேசரி.

தோழர்களே!
EPIC அரும் ஈழச்செய்திகளை தொலைபேசி மூலம் அறிய நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்.... 48-74-98-30.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**மகத்தான எம் தோழனுக்கு**

பயணம் அனுப்பிவிட்டு
படுத்து உறங்கையிலே
தோழர்! தோழரென எழுப்பிப்
பொல்லாத சோகத்தைச் சொன்னார்
மட்டு நகர்ப் பிராந்தியத்தின்
மற்றுமொரு தளபதியும் மாண்டான்!
வேதனையால் துடித்தேன்
வேறு எதற்காக?

அன்பான உன் உள்ளத்தின்
பிரிவை எண்ணியல்ல;
திட்டமிட்டுச் செயலாற்றும்
திறனுள்ள தோழன்,
மட்டுநகர்ப் பிராந்தியத்தில்
மகத்தான தன் சுவடுகளை
பதிக்கும் முன்பே!
பாதி வழியினிலே
பாக்கு நீரிணையினிலே
பாதகர்கள் கொன்றதனால்
மீண்டும் அழுகின்றேன்!

காரை நகர்த் தாக்குதலில்
உன் தலைமைதனை
கடலலையும் பார்க்கலையோ!
பார்த்திருப்பின்
பேரலையாய் வந்து அன்று
பாதகரைச் சீர்குலையச் செய்திருக்கும்.
பாவம் அது;
தீராத உன் திறமைதனை தெரிந்திருந்தால்
பாராமல் இருந்ததுவோ?

உன் வரவை நோக்கி
இரவு பகல் காத்திருந்து
அம் தோழர்களிடம்
என் சொல்வேன்;
விடியலை எதிர்நோக்கி
விடியும் வரை காத்திருந்த
கலங்கரை விளக்கொன்று
கயவர்களின் தாக்குதலால்
நிலை குலைந்தது என்று சொல்வேன்.

என் செய்வேன்!
ஈர் நாலு ஆண்டுகள்
இரவு பகலாக உழைத்த
உன்பாதை இங்கு
வெறிச் சோடிக் கிடக்கவில்லை!

பல நூறு தோழர்கள்
ஆம், உன் பாசறையில் பயின்றவர்கள்
தொடர்கிறார்கள்.

— தோழர் கிருபா —

* ஈ.பு மக்களுக்காக மரணித்த மக்கள் விடுதலைப் படையின் மட்டுநகர் தோழன் ரஞ்சித்தின் நினைவாக . . .

www.tamilarangam.net

# அமெரிக்க ஏகாதிபத்தியத்தின்

# அந்திமகாலம் நெருங்குகிறது

அமெரிக்க ஏகாதிபத்தியமும் அதனது சகபாடிகளும் தமது இரத்தக்கறை படிந்த கரங்களால் உலகம் பூராவும் ஒரு அடக்குமுறை வரலாற்றை எழுதிக்கொண்டிருக்கின்றன. சுரண்டல், அடக்குமுறை, இனவாதம், நிறவாதம், வர்க்கபேதம் போன்ற தமது கோரமான நகங்களால் உலகம் முழுவதுமுள்ள கோடிக்கணக்கான அப்பாவிமக்களை குத்திக்குதறிக்கொண்டிருக்கின்றன. இந்தக்கொடுமைகளையும் இதற்கெதிரான எண்ணற்ற மக்கள் நடத்தும் வீரமிக்க போராட்டங்களையும் அறியும் ஆவல் இல்லாது இவற்றுக்கும் எமக்கும் சம்பந்தமில்லை என்று நாம் பேசாமல் இருந்துவிட முடியாது ஏகாதிபத்திய முதலாளித்துவங்களின் பூரண ஆசியுடன் ஆயிரக்கணக்கானோரை எமது பாசமிகு மக்களைக் கொன்றழித்து ஒரு அராஜக தர்பார் நடத்தும் சிங்கள இனவாத முதலாளித்துவ அரசுக்கெதிராகப் போராடிவரும் நாம் இந்த அடக்குமுறைச் சதிகளையும் புரிந்துகொண்டு இவற்றுக்கெதிராகக் கிளர்ந்தெழுந்து உலகளாவிய ரீதியில் இந்த ஏகாதிபத்திய முதலாளித்துவங்களைப் பலவீனப்படுத்தாத வரையில் எமது விடியல் தூரமானதாகவே இருக்கும்.

தென்னாபிரிக்காவைப் பொறுத்தவரையில் அன்றாடம் தம்மைப்பிணைக்கும் புதிய புதிய விலங்குகளை உடைத்தெறிந்து கறுப்புஇன மக்கள் குமுறும் எரிமலையாய் கிளர்ந்தெழுந்துள்ளார்கள். அடக்குமுறை அரசினால் 10,000ஐ அண்மித்த கறுப்பு இன மக்களின் முக்கிய பிரமுகர்கள் சிறை வைக்கப்பட்டுள்ளபோதிலும் இதுவரை 4000க்கு மேற்பட்டோர் அரசபயங்கரவாதத்துக்குப் பலியாகியுள்ளபோதிலும் தினந்தோறும் புதுப்புது வடிவங்களில் அவர்களது போராட்டங்கள் கிளர்ந்து வெடிக்கின்றன. அமெரிக்கக் கைக்கூலியான

www.tamilarangam.net



போதாவின் நிறவாத அரசுக்கு ஆங்காங்கே வெடிக்கும் குண்டுகள் மாத்திரம் அச்சத்தைக் கொடுக்கவில்லை. அரச சட்டங்களை அலட்சியப்படுத்தி புதிதாய் வெடிக்கும் மக்கள் போராட்டங்கள் பெரும் பீதியைக் கிளப்பியுள்ளன. கடந்தமாதம் கறுப்புஇன மக்களின் புரட்சியை வழிநடத்தும் மாநிலமான ஸ்வோட்டாவின் வெளிஊர் நகரில் வசிக்கும் கறுப்புஇன மக்கள் அரசு நிர்ணயித்த வீட்டு வாடகை உயர்வுகளை ஏற்க மறுத்ததுடன் இனி நாம் வீட்டு வாடகையே கொடுக்க மாட்டோம் எனச் சட்டமறுப்புப் போராட்டத்தை அறிவித்தனர். இதையொட்டி நடந்த ஆர்ப்பாட்டத்தில் 20 பேருக்கு இமற்பட்ட அப்பாவிக் கறுப்பின மக்கள் அரசபயங்கரவாதத்துக்குப் பலியாகியுள்ளதுடன் 100க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தும் உள்ளனர். தொடர்ந்தும் தொடர்ந்தும் இத்தகைய அடக்குமுறைகளையும் அரசபயங்கரவாதத்தையும் தென்னாபிரிகாவிலுள்ள கறுப்புஇன மக்களுக்கெதிராகவும் தென்னாபிரிக்காவைச் சுற்றியுள்ள முற்போக்கு ஆட்சியாளர்களாகிய அங்கோலா, ஸிம்பாவே, மொசாம்பிக் போன்ற நாடுகளுக்கெதிராகவும் கட்டவிழ்த்துவரும் தென்னாபிரிக்க, இனவாத அரசின் நடவடிக்கைகளையே சர்வதேச பயங்கரவாதத்தின் தந்தையான றேகன் முற்போக்கு நடவடிக்கைகள் என்றும் இனவாதத்தைத் தீர்க்க எடுக்கப்படும் ஆக்கபூர்வமான முயற்சிகள் என்றும் வர்ணித்திருக்கின்றான். தமக்கு எதிரான அனைத்து அடக்குமுறைகளையும் தென்னாபிரிக்காவின் கறுப்பின மக்கள் தகர்த்தெறியப்போவது நிட்சயம்.

அதேசமயம் தனக்கு எதிரான கொள்கைகளை உடைய நாடுகளுக்கெதிரான அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அத்திரமூட்டல் நடவடிக்கைகள் உச்சகட்டத்தை அடைந்து வருகின்றன. ஏற்கனவே சுதந்திர தன்னுதிக்கமுள்ள நாடான லிபியாவின் மீது தனது விமானங்களை ஏவி குண்டுகளை வீசி அப்பாவி மக்களைக் கொன்றழித்த அமெரிக்க ஏகாதிபத்தியம் மீண்டும் லிபியாவுக்கு ஆத்திரமூட்டி

www.tamilarangam.net




ஒரு போரை ஏற்படுத்தி தனது ஆதிக்கக் கரங்களை இரத்தத்தில் நனைக்கும் நோக்குடன் எகிப்துடன் இணைந்து இராணுவ ஒத்திகை ஒன்றை நடத்தி லிபியாவை மிரட்டியுள்ளது. இந்த ஒத்திகை லிபியா மீது அமெரிக்க ஏகாதிபத்தியம் நடத்தவிருக்கும் அடுத்த தாக்குதலுக்கான முன்னேற்பாடு என்று சர்வதேச அவதானிகள் கூறியுள்ளனர்.

அதேவேளையில் லிபியப் புரட்சியின் 17ஆவது ஆண்டுநிறைவையொட்டி நடந்த வைபவத்தில் பேசிய லிபியத் தலைவர் கேணல் கடாபி அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆத்திரமூட்டல் முயற்சிகளை வன்மையாகச் சாடியதுடன் றேகன் ஒரு நாசிச் சர்வாதிகாரி என்றும், அவன் ஒரு சித்தசுவாதீனமற்றவன் என்றும் கூறியதுடன் அமெரிக்காவுக்கெதிராக உலகின் ஒவ்வொரு மூலையிலும் போராட ஒரு சர்வதேசப் படையை அமைக்கப்போவதாகக் கூறியுள்ளார்.

கடாபியின் கண்டனங்கள் இவ்வகையில் அமைந்திருக்கும் அதேவேளையில் ஸிம்பாவேயின் ஹராரே நகரில் நடைபெற்ற அணிசேரா நாடுகளின் 8ஆவது மாநாட்டிலும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கெதிரான கண்டனக்கணைகள் வன்மையாகத் தொடுக்கப்பட்டுள்ளன. மாநாட்டை ஆரம்பித்து வைத்த புதிய தலைவரான ஸிம்பாவே பிரதமர் றொபேட் முகாபே தென்னாபிரிக்கா தொடர்பான அமெரிக்கக் கொள்கைகளை வன்மையாகச் சாடியதுடன் அங்கோலாவினது எதிர்ப்புரட்சியாளர்கட்கும், நிக்கரகுவாவின் கொன்றாசுக்கும் ஆப்கானிஸ்தானில் முஜாகிதீனுக்கும் நிதி மற்றும் ஆயுதங்கள் வழங்கி முற்போக்கு அரசாங்கங்களைக் கவிழ்க்க முயலும் அமெரிக்கஏகாதிபத்தியத்தின் கயமைத்தனத்தை வன்மையாகக் கண்டித்த முகாபேயுடன் இந்தியா, நிக்கரகுவா, போன்ற நாடுகளும் இணைந்து அமெரிக்க ஏகாதிபத்தியத்தைக் கண்டித்தன.

www.tamilarangam.net






தொடர்ச்சியாக உலக அரங்கில் தோல்விகளையும், கண்டனங்களையும் மட்டுமே சம்பாதித்துவரும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு இன்னுமொரு அடி பிலிப்பைன்சில் விழுந்துள்ளது. பிலிப்பைன்சுக்கு ஒரு சிகப்பு விடியலைக்கொடுப்பதற்காகப் போராட்டம் நடத்தி வரும் புதியமக்கள் இராணுவம் ஈட்டிவரும் அரசியல், இராணுவ வெற்றிகளால் திகைப்புற்ற அக்கினோ அரசாங்கம் புதிய மக்கள் இராணுவத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி ஒரு அரசியல் தீர்வு காணவேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இந்தப் பேச்சுவார்த்தைகள் எங்கே புதிய மக்கள் இராணுவத்தின் கரங்களை மேலும் ஓங்கச்செய்துவிடுமோ, பிலிப்பைன்சும் தன் கரங்களை விட்டு நழுவிப் பிலிப்பைன்சு மக்களுக்கு ஒரு விடியல் வந்துவிடுமோ, அங்கே உள்ள தனது பிரபல்யப் படைத்தளங்கள் மூடப்பட்டு விடுமோ, என்ற அச்சங்கள் சூழ றேகன் நிர்வாகம் விரைந்தடித்து NPA உடன் இணைந்து பிலிப்பைன்சின் பிரச்சனைக்குத்தீர்வு காணமுனைந்த

www.tamilarangam.net

# TAMOUL MURASU


MURASU : 4
OLI : 12

OCTOBRE
1986



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


MURASU 60

# EDITORIAL

## *TRAVAILLEURS DES PLANTATIONS VIS-A-VIS DU COMBAT D'EELAM*

*La suppression intense que subissent des Travailleurs des Plantations dans le centre du pays exercée par le gouvernement, montre une fois de plus, leur active participation dans la lutte d'Eelam.*

*Plus de cent travailleurs des plantations ont fait objet de détention dans les prisons et les camps militaires, sur l'ordre du gouvernement. Les gens du gouvernement les accusent d'avoir contribué à la bonne marche du combat du peuple d'Eelam.*

*En même temps, au moins une fois par mois, il y a grève parmi des travailleurs des plantations, soutenant la protestation contre le terrorisme d'état et la détention sans relâche des jeunes Tamouls.*

*Pendant que l'armée a été envoyé pour intervenir dans les grèves des travailleurs des plantations, les chemins ont été bloqués et les troupes devaient se replier en faisant le halte dans les basses parties des colines.*

*Cette protestation massive des travailleurs des plantations contre le gouvernement qui aurait à faire récemment contre l'entente entre le gouvernement et les bandits Singhalais, montre dans son ensemble la participation des travailleurs de plantation dans la lutte du peuple d'Eelam.*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## 110 TRAVAILLEURS DES PLANTATIONS ONT ETE ATTAQUES PAR LES BANDITS SINGHALAIS

Il y avait des attaques commises contre les innocents travailleurs des plantations depuis le 10 septembre 1986, par les bandits singhalais, à Kinigathenai à Kenilwatte estate. A cause de cette soudaine attaque lancée contre les travailleurs, ceux-ci ont dû perdre leurs maisons et biens.

Ces travailleurs ont dû marcher à travers la forêt pendant deux jours et deux nuits pour atteindre enfin l'association de Hatton Hindou Maha. Ils ont été accueuilis dans cette association. Leur nombre est de 110.

Le 20 septembre 1986, le directeur de la committée de l'estate unifié, Mr. Gamini Athukorela, le sécrétaire de la finance du congrès des travailleurs de Ceylon, Mr. V.Annamalai et autres hauts fonctionnaires ont rendu visite aux lieux sinistrés, à cause des attaques portées contre les 110 travailleurs de plantations.

## EXPLOSION DE BOMBE AU SIEGE SOCIAL DU CONGRES DES TRAVAILLEURS DE CEYLAN

Une bombe a été lancée au siège social du congrès des travailleurs de Ceylan à Colombo. Elle a explosé à 19H45 le mardi du 16 septembre 1986. Dans cette explosion, il y avait trois personnes qui sont blessées assez sérieusement. Une voiture stationnée dans cet endroit a aussi subi de dommage.

Il a été rapporté que la bombe a été jetée d'un camion au bureau du syndicat ci-dessus.

Il est à noter que le leader du congrès des travailleurs de Ceylan, Mr.S.Thondaman est un membre du gouvernement actuel.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


## GREVE DE LA FAIM JUSQU'A LA MORT TENUE PAR LES PRISONNIERS POLITIQUES DANS LE CAMP DE BOOSA ET AU PRISON DE WELIKADE

Les prisonniers politiques tamouls ont lancé une grève de la faim jusqu'à la mort dans le camp de Boosa et dans le prison de Welikade, Colombo, dans le but de forcer le gouvernement Srilankais d'arrêter les tortures appliquées dans les camps.

Nombreuses réquêtes formées par les prisonniers auprès des autorités compétantes ont été rejetées aussi bien au camp de Boosa que dans le prison de Welikade.

Les revendications des détenus sont les suivantes:

* Arrêt total de toutes formes de torture dans les camps de detention.

* Aide médicale aux personnes atteintes par les maladies, ou à celles qui ont besoin d'être secourées.

* Approvisionnement suffisant de l'eau potable.

* Abolissement de la peine pour les fautes non commises.

Le gouvernement ne prend pas en considération les requêtes des prisonniers, mais au contraire les prisonniers politiques tamouls ont reçu discontinuellement des mauvais traitements.

La grève de la faim a débuté le 4 septembre 1986 et elle est toujours maintenue.

Selon la nouvelle provenance du centre d'informations du peuple d'Eelam pendant cette grève de faim, une personne participant à cette grève est décédée.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



154 personnes au camp de Boosa et au prison de Welikade maintiennent la grève de faim. Un détenu Singhalais Mr.Henri Perera, a aussi participé à cette grève de faim en solidarité avec ses co-détenus tamouls, car lui aussi fait partie des détenus du prison de Welikade.

Solidaire avec la grève de la faim des prisonniers, les étudiants de Jaffna ont organisé une manifestation, à laquelle participèrent aussi les étudiants de l'université de Jaffna. Les juristes de leurs côtés ont deserté les tribunaux pendant une semaine en signe de solidarité avec les prisonniers de camp de Boosa et du prison de Welikade.

Une demonstration a eu lieu devant l'office de la haute commission à Madras en Inde le 2 octobre 1986, organisée par les étudiants appartenant aux organisations de libération, EPRLF, TELO, EROS et PLOT.

Il est à rappeler qu'il y a plus que 2000 tamouls sont détenus dans le camp de Boosa, et ce-ci sous la loi de prévention contre le terrorisme. Cette loi de prévention contre le terrorisme permet aux autorités de détenir les prévenus pendant 10 mois et ce-ci sans qu'il y a eu un jugement. Et pourtant, le gouvernement Srilankais, passe outre des règles établies en détenant les tamouls pendant des années sans les interventions des tribunaux.

Leurs requêtes ne sont pas prises en considération par le gouvernement chauviniste Srilankais, mais celui-ci, continue à maltraiter les prisonniers politiques tamouls.

La population tamoule dans les régions du Nord et de l'Est est solidaire avec les grevistes de la faim.

Selon la dernière nouvelle parvenue de Sri Lanka, la grève était terminé le 3 oct et après l'intevention de la committe des citoyens de colombo

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## L'INDE BOYCOTTE LE MEETING QUI AURA LIEU DU 29.09.86 - 01.10.86 ENTRE LES PAYS DE SUD EST ASIATIQUES A COLOMBO

Mr.Jeyawardene a invité sous le patronage de l'UNICEF les pays du Sud Est asiatiques, à se rencontrer à Colombo du 29.09.86 - 01.10.86.

La question traitée sera le problème de l'enfance dans le monde et bien entendu celui des enfants des pays invités.

Pour donner réplique aux refuses du gouvernement Srilankais concernant le problème tamoul, qui ont fait couler beaucoup d'encre, l'Inde ne se rend pas à cette invitation.

Une fois de plus Mr.Jeyawardene est nié publiquement par son voisin et ami, l'Inde.

POUR TOUTES LES CORRESPONDANCES:

L'EDITEUR,

TAMOUL MURASU,

CONSEIL DE LA LIBERATION D'EELAM,

10, RUE DE MARTYRS, 75009, PARIS.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## EXPLOSION DE BOMBE DANS LES REGIONS SINGHALAISES

Il y avait des nombreuses explosions de bombe dans les régions Singhalaises pendant ces derniers mois. Il est à croire que ces incidents ont un lien étroit avec le combat qui mène le peuple d'Eelam.

Dimanche le 14.09.86, une bombe explosa dans laquelle une femme trouva la mort et un jeune garçon a été sérieusement blessé. Cet incident a eu lieu à Anuradhapura Road à Nochchiyagama.

Une autre explosion de bombe a eu lieu non loin de la prison Mahara, dans le district de Colombo. Dans cette explosion une personne a trouvé la mort et quatre autres ont été blessées sérieusement. Cette explosion a eu lieu le Vendredi le 19.09.86. Il a été rapporté que l'explosif a été placé dans un paquet, puis déposé devant l'entrée de la prison Mahara.

Cet incident prouve qu'il y a un mécontement parmi les Singhalais dans le sud de Srilanka.

## LE PONT DE PADDIRUPPU A ETE ENCORE ENDOMMAGE

Le Samdi, 13.09.86, un pont a Paddiruppu a été endommagé par des inconnus. Après le récent dommage qu'a subi le pont, il a été destiné aux piétons. Mais cet endommagement, il a été complètement détruit. La population de l'endroit où le pont est utilisé pour aller vers l'île, celle-ci a dû recourir aux bateaux.

Le gouvernement en revanche, envoie des plus en plus des troupes vers les régions Nord et Est de l'île, dans le but de humilier les Tamouls et surtout pour détruire les propriétés des localités.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## REALITES D'AUJOURD'HUI!

Notre terre
Se mouille
Par la pluie de sang.

Ce n'est pas un rêve.
C'est la réalité
Que je vois tous les jours.

Derrière les portes
Embrassées par la nuit,
Nos mères attendent
Avec la confiance
Que les enfants
"Viendront ...."
Le coq chanta
A leurs oreilles.

Il était une fois
Des partants, des revenants.
Le temps a changé.
Maintenant
On peut voir
Si l'on revient.

Le temps est mort
Quand il y a des capsules
Dans les mains
De nos enfants.
Les voici en train de jouer
Avec des cartouches vides.

Les réalités venant
De l'air poison
Sont une habitude pour nous,
Même qu'il pleut du sang
Dans les livres
De nos enfants,
Sans toucher la crasse.
Les noyaux de ces nouvelles générations
Sont habitués à marcher sur le feu.

Sur notre terre
Tombe la pluie de sang.
Ce n'est pas le destin.
Moi, je connais:
C'est la conspiration.

Moi, je vois bien
La fin des réalités
D'aujourd'hui.

Notre ciel rougi
Par la chaleur du sang
Va pâlir définitivement.



_MOGAN_

PUBLIE PAR CONSEIL DE LA LIBERATION D'EELAM (FRANCE)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அக்கிறே அரசைக் கண்டித்ததுடன் பிலிப்பைன்சின் பிரச்சனைக்கு இராணுவத் தீர்வே சாத்தியம் என நச்சைக் கக்கியுள்ளது. இதற்குப் பதிலளித்த பிலிப்பைன்சு ஜனதிபதி அக்கிறே பிலிப்பைன்சின் பிரச்சனைகட்கு தீர்வு காண்பது பிலிப்பைன்சு அரசாங்கமே ஒழிய அமெரிக்க அரசல்ல எனக் கூறி றேகனின் முகத்தில் அறைந்துள்ளார்.

இது இப்படியிருக்க அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அடிவருடிகள் பலரது ஆட்சிகள் ஆட்டங்காண ஆரம்பித்துள்ளன. பாகிஸ்தானில் ஸியாஉல்ஹக்கின் ஆட்சிதளம்ப ஆரம்பித்துள்ள அதேவேளையில் சிலியின் புரட்சியாளன் அலன்டேயைக்கொன்று அந்த இரத்தத்தை தன் கரங்களில் பூசிக்கொண்ட படுகொலையாளனும் பாசிசவாதியும் றேகனின் அடிவருடியுமான சிலியின் சர்வாதிகாரி பினேசெற்றுக்கு எதிரான கொலைமுயற்சி சிலியை மாத்திரமல்ல றேகன் நிர்வாகத்தையும் கிடுகிடுக்க வைத்துள்ளது ஐரோப்பாவில் நேட்டே அமைப்புகளுக்கெதிரான இராணுவத் தாக்குதல்கள், மத்திய கிழக்கில் நடக்கும் கடத்தல் நாடகங்கள். இலத்தீன் அமெரிக்க நாடுகளில் இராணுவ மற்றும் பொருளாதார நெருக்கடிகள், ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் முற்போக்குச் சக்திகள் வலிமைபெற்று வருதல் இவை அனைத்தும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும் அதன் சகபாடிகளையும் மூச்சுத் திணற வைக்கின்றன. திசைகள்தோறும் கிளர்ந்தெழுந்து வரும் புரட்சிப் புயற்காற்று இந்த விசவிருட்சத்தை விரைவில் வேரோடு சாய்க்கும். இது வரலாற்று நியதி.

**.......................................**

தோழர்களே!

உங்கள் தொடர்புகளுக்காக ஈ.பி.ஆர்.எல்.எவ் புரட்சிகர விடுதலை முன்னணியின் பிரான்சுப் பிரிவு அலுவலகமும் உங்கள் பாவனைக்காக நூலகமும் தினசரி 4 மணிதொடக்கம் 8 மணிவரை (பிற்பகல்) திறந்திருக்கும் என்பதை அறியத் தருகிறோம்.

– EPRLF (பிரான்சு)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சர்வதேச அரங்கில்

# தாழ்ந்து செல்லும் ஈழ மக்கள்

சமீபகாலங்களில் சர்வதேசத் செய்தித்தொடர்பு அரங்கில் புதிய முக்கியத்துவம் பெற்றவர்களாக ஈழ அகதிகளாக நாம் விளங்குகின்றோம். 'ரைம்', 'நியூஸ்வீக்', 'டிரிஞன் சியன்ஸ்ரம்' போன்ற பிரபல்ய பத்திரிகைகள் கூட முக்கியத்துவம் கொடுத்து எம்மைப் பற்றிய செய்திகளைப் பெரிய அளவில் வெளியிட ஆரம்பித்துள்ளன. ஆனல் இவை பற்றி நாம் எந்த அளவிலும் மகிழ்ச்சிகொள்ள முடியாது. காரணம் சிறீலங்கா இனவாதஅரசு நடத்திவரும் படுகொலைகளிலிருந்து தப்பிப்பதற்காக ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் புகுந்த எம்மில் சிலர் நடந்துகொண்ட தகாத முறைகளும், தவறன செயல்களும் இன்று முற்றுமுழுதாய் ஒர் இனத்தின் தவறுகளாக இந்தப் பத்திரிகைகளால் வர்ணிக்கப்படுகின்றன. ஒரு காலத்தில் கட்டுப்பாடான மக்கள், நாகரீகம் மிகுந்தவர்கள்; கடினமான உழைப்பாளிகள், கல்வியறிவில் சிறந்தவர்கள், மிகுந்த உழைப்பாளிகள் ஒழுக்கவாதிகள் என்ற கிரீடங்களைத் தாங்கி நின்ற எமது இனம் இன்று சர்வதேச அரங்கில் ஏமாற்றுக் காரர்கள், ஒழுக்கமற்றவர்கள், போதைமருந்துக்கடத்தல்களில் ஈடுபடுபவர்கள், குற்றச்செயல்களின் மொத்தச் சொந்தக்காரர்கள், ஜொய்யர்கள் என்ற பெயர்களையெல்லாம் தாங்கவேண்டிய தர்ப்பாக்கிய நிலை எமது இனத்திற்கு ஏற்பட்டுள்ளது.

ரைமும் நியூஸ்வீக்கும் அமெரிக்கக்கைக்கூலிச் சஞ்சிகைகள், இவை ஏகாதிபத்தியத்தின் அடி வருடிகள் இவை ஈழப்போராட்டத்தைக் கொச்சைப்படுத்தவும், இயக்கங்களைத்த னிமைப்படுத்தவும் சீ.ஐ.ஏ திட்டமிட்டு இப்பத்திரிகைகள் மூலம் பொய்ப்பிரச்சாரம் செய்து வருகிறது. இவையெல்லாம் ஏகாதிபத்திய முதலாளித்துவங்களின் சதிகள் என்று புதிரான மொழிகளில் புரியாத வகைகளில் பேசிக்கொண்டு நாம் தப்பித்துப்போய்விட முடியாது. ஈழத்திலே ஆக்கிரமிப்பாளருக்கெதிராக ஆயுதப்போராட்டம் நடத்தியில் போதும் ஆபத்துகளிலிருந்து தப்பி வெளிநாடுகளுக்கு ஓடிவிட்டவர்களைப் பற்றியோவன்றி சர்வதேச அரங்கில் எமது இனத்துக்குக் கிட்டிவரும் அவப்பெயரைப்பற்றியோ எமக்குக் கவலை என்று ஈழவிடுதலை இயக்கங்கள் பேசாமல் இருந்துவிடமுடியாது.


எம்மை நாம் விமர்சனம் செய்துகொள்ளவும், இறுக்கமான, ஒழுக்கமான, கட்டுப்பாடுமிக்க இனமாக மாற்றிக்கொள்ளவும் வேண்டிய காலகட்டம் இது. இன்று சர்வதேசரீதியில் எமது இனத்துக்கு அவப்பெயரைச் சேர்க்கும் நடவடிக்கைகள் இருவகைகளில்நடைபெறுகிறது. ஒன்று இன்னலெதுவுமற்ற பாதுகாப்பான இந்தச் சூழ்நிலைகளில் மேல்நாட்டின் சொகுசு வாழ்க்கைகளில் மயங்கிப் பணத்தாசை பிடித்தவர்களாய் மேலும் மேலும் பணத்தைச் சம்பாதிக்கும் நோக்குடன் தவறன முறைகளையும் தவறன வழிகளையும்தகாத முறைகளையும் நாடி நமது இனத்தின் பெயருக்கு மாசு படியவைக்கிறது ஒருகூட்டம். அடுத்தது புனிதமான இயக்கங்களின் இலட்சியத்தைக் கறைப்படுத்துவதற்காகவும், தமது கரங்களை வலுப்படுத்துவதற்காகவும் வெகு சிறப்பாகவே திட்டமிட்டு சில இயக்கங்களினுள் ஊடுருவி அவற்றின் பாதைகளை திசைதிருப்பித் தவறன பாதைகளுக்கு இட்டுச்செல்லுகின்ற முதலாளித்துவக் கைக்கூலிகள் கூட்டம். இக்கூட்டம் மிகவும் ஆபத்தானது. தமது சுயநலமும், சுயவளமும் பேணுவதற்காக இந்தக் கோடரிக் காம்புகள் சர்வதேச அரங்கில் செய்த சமூகவிரோதச் செயல்கள் இன்று ஈழமக்களுக்கும், ஈழவிடுதலைஇயக்

www.tamilarangam.net



கங்களுக்கும், ஈழவிடுதலைப்போராட்டத்திற்கும் மாறாத அவப்பெயரைக்கொடுத்துள்ளது இந்தநிலை தொடருமானால் சர்வதேச அரங்கில் தொடர்ச்சியாக ஈழவிடுதலைப்போராட்ட பிரச்சார நடவடிக்கைகளோ அன்றி நிதிசேர்ப்பு நடவடிக்கைகளோ செய்யமுடியாத ஒரு நிலை ஏற்படும். அதுமாத்திரமல்ல உலகளாவிய கோடிக்கணக்கான மக்களினது தார்மீக ஆதரவை இழந்துவிடவேண்டிய ஒரு கட்டத்துக்குள்ளும் நாம் தள்ளப்பட்டு விடுவோம்.

எனவே தொடர்ச்சியாக எமது இனம் உலக அரங்கில் தறிகெட்ட இனமாக தாழ்ந்து போகப்போகின்றதா அல்லது தன்நிலை உணர்ந்து தன்னைத் திருத்திக்கொள்ளப்போகின்றதா? இயக்கங்கள் தொடர்ந்து வெற்றிகளைப்பற்றி மாத்திரம் வீரமுழக்கமிட்டுக்கொண்டு இருக்கப்போகின்றனவா அல்லது எம்மினத்தை நெருங்கிவரும் விபரீதத்துக்கு முற்றுப் புள்ளிவைக்கும் நடவடிக்கைகளைச் செய்யப்போகின்றனவா? ஒருபுறம் ஸ்ரீலங்கா நவபாசிச அரசின் நசுக்கலிலே மக்களையும், மண்ணையும் இழந்துசெல்லும் நாம் மறுபுறம் சர்வதேச அரங்கிலேஎம்மினத்தின் மாண்பை இழந்துசெல்லும் இந்த நிலை ஈழப்போராட்டத்தில் பெரும் தேக்கத்தையும் தாக்கத்தையும் ஏற்படுத்தும் என்பதைப் புரிந்துகொண்டு இனத்தை விற்கும், இனத்துக்குக் களங்கள் விளைவிக்கும் இந்த சர்வதேசச் சமூக விரோதிகளுக்கெதிராக போர்தொடுப்போம்.



'இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வையே விரும்புகிறேன்'

– ஜெயவர்த்தனா.

1986ம் ஆண்டின் சிறந்த நகைச்சுவை.

www.tamilarangam.net


# போர்க்காலமும் பெண்கள் விடுதலையும் நிக்கரகுவாவில் புதிய அத்தியாயம்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கெதிரான நிக்கரகுவாப் புரட்சியின் அறுவடைகளில் ஒன்று – பெண்ணினத்தின் வாழ்க்கையிலேற்பட்ட முற்போக்கான மாற்றமாகும். போர்க்காலத்தில் நிக்கரகுவாப் பெண்களின் அடிப்படை உரிமைகளிற்கு எவ்வாறு அங்கீகாரம் கிடைத்தது? அவர்கள் அடைந்த முன்னேற்றங்கள் எவை? இவைகளை ஆய்வு செய்திருக்கிறார் AFRICASIA சஞ்சிகையின் கட்டுரையாளரான கதரீன் காண்டர்.

பிள்ளைகளைப் பராமரிப்பதே நிக்கரகுவாவில் பெண்களின் முக்கிய பணிகளாகக் காலங்காலமாக இருந்து வந்துள்ளது. தேசிய ரீதியில் நோக்குமிடத்து 48%ஆன குடும்பங்களின் முக்கிய குடியிருப்பாளர்களாக பெண்களே இருந்தாலும் பட்டினங்களைத் தவிர்த்து நோக்கும்போது இச் சதவிகிதம் 60 ஆக உயர்ந்து காணப்படுகிறது. பரந்துபட்ட வறுமையும் வேலையின்மையும் ஆண்களை வேலைதேடி இடம்பெயர வைத்துள்ளமையும் தென் அமெரிக்காவின் "மச்சிஸ்மோ" முறை மூலம் ஆண்கள் தங்களின் குடும்பக் கடமைகளை உதறிவிடுவதும் மேற்குறிப்பிட்ட நிலமைக்குக் காரணமாக இருக்கலாம்.

என்றும் சான்டினிஸ்டா புரட்சியின் பின்அரசாங்கத்தால் வழங்கப்படும் சமூக நல உதவிகளைப் பெறுவதில் இன்று பெண்கள் முன்வந்துள்ளனர். படிப்பறிவூட்டும் திட்டம் 1980ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டபோது பயன்பெற்ற வயதுவந்தோரில் அரைப் பங்கினர் பெண்களேயாவர். புரட்சியின்பின் முதல் நான்கு வருடங்களில் கிளினிக்குகளிலும் மற்றும் வைத்திய நிலையங்களிலும் சிகிச்சை பெற்றவர்களின் தொகை 1977ம் ஆண்டுப் புள்ளி விவரங்களை விட மூன்று மடங்கு அதிகரித்துள்ளது அதோடு வைத்திய வசதி இப்போது பெண்களுக்கு இலகுவாகக் கிடைப்பதோடு பிரசவத்திற்கு முன்னும் பின்னும் தேவையான கவனிப்பும் தடையின்றி இப்போது வழங்கப்படுகின்றது. கிட்டத்தட்ட 50 பகல்நேர சிறுவர் கவனிப்பு நிலையங்கள் நாடெங்கிலுமே திறக்கப்பட்டுள்ளதோடு நூற்றுக்கணக்கான சில்லறைக்கடைகள் பெண்களே தமக்குத் தேவைப்படும் பொருட்களை இலகுவில் வாங்கும் வகையில் நிறுவப்பட்டுள்ளன.

1979ம் ஆண்டுதொடக்கம் ஆண்கள் மேலும் அதிக குடும்பப் பொறுப்புகளைச் சுமக்கும் வகையில் வற்புறுத்தப்பட்டு வந்துள்ளனர். நிக்கரகுவாப் பெண்கள் அசோசியேசன் (ஏஎம்எல்ஏஇ) 1982ம் ஆண்டு யூலை மாதம் பாராளுமன்றத்தில் சட்டமாக்கப்பட்ட மசோதாவைத் தயாரித்ததிலும் பிரசித்தியடையச் செய்ததிலும் பெரும்பங்கு வகித்தது. தகப்பன், தாய் குழந்தைகளின் உறவுகள் எவ்வாறு இருக்கவேண்டுமென்று இச்சட்டம் விவரிப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. காலங்காலமாக நிலவிவந்த தகப்பனின் குடும்ப ஆளுமையை ஒழித்து ஆணுக்கும் பெண்ணுக்கும் சரிசமமான குடும்பப் பொறுப்புக்களையும் உரிமைகளையும் இச்சட்டம்

www.tamilarangam.net



வழங்குகிறது. எனினும் ஆகக்கூடிய பாதிப்பை ஏற்படுத்துவது "பராமரிப்புப்"பற்றிக்கூறும் வேறொரு மசோதாவாகும். பிள்ளைகளின் கவனிப்பும் கல்வியூட்டலுக்கும் தகப்பனையும் தாயையும் பொறுப்பேற்க வற்புறுத்தும் அதேவேளை வயதுபோன மற்றும் அங்கவீனமான பெற்றோரைப் பாதுகாப்பது வயதுவந்த பிள்ளைகளின் கடமையென இம்மசோதா கூறுகிறது. பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பது ஒரு உதாரணம் எனக் கொள்ளக்கூடிய இம் மசோதா நாடளாவிய ரீதியில் ஆதரிக்கப்பட்டு சட்டமாக்கப்படலாம் எனத் தேசிய கவுன்சிலால் பரிந்துரைக்கப்பட்டது. எனினும் தற்போதைய ஜனாதிபதியான திரு டானியல் ஒற்றேகா சட்டமாக்குவதை ஒத்திவைத்து அதற்கான காரணத்தை விளக்குகையில் இச்சட்டத்தின் நோக்கங்கள் சரியானவையே. எனினும் நாட்டின் தற்போதைய சூழ்நிலை இச்சட்டத்தினை அமுல்படுத்தும் அளவிற்கு முன்னேறவில்லையெனத் தெரிவித்தார்.

"ஏ.எம்.என்.எல்.ஏ.இ" யின் நெறியாளரான திருமதி மேரியாலா பீஸ்பொலானாஸ் கருத்துக் கூறுகையில்" பராமரிப்பு மசோதா பற்றிய சச்சரவு தேவையானதே. நாங்கள் ஒரு தேசியரீதியிலான விவாதத்தைத் தொடக்கி வைத்துள்ளோம். இது மக்களின் மனச்சாட்சியைத் தட்டி எழுப்பும் ஒரு நடவடிக்கையாகும்.என்று ஆசியாபிரிக்கா சஞ்சிகைக்குத் தெரிவித்தார். உண்மையில் ஆகஸ்ட் மாதம் 1979ம் ஆண்டு தயாரிக்கப்பட்டதற்காலிக அரசியலமைப்புச் சட்டத்தில் உரிமைகள். உறுதியுரைகள் பிரிவில் நிக்கரகுவாவின் சகல பிரசைகளுக்கும் நிபந்தனையற்ற சம உரிமைகளை வேலை வசதி குடும்ப விவகாரங்கள் போன்ற துறைகளில் வழங்கப்பட்டிருக்கிறது. பொதுச்சட்ட விவாகம் – அதாவது நகர, கிராமப்புற வறிய மக்களிடையே நடைபெறும் இவ் விவாகங்களுக்கும் மற்றையச் சட்டபூர்வ விவாகங்களுக்குரிய அந்தஸ்து வழங்கப்பட்டிருக்கும்.இதே சமயம் இவ்விரு விவாகங்களின் மூலம் பிறக்கும் பிள்ளைகட்குச் சரிசமமான உரிமைகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

விபச்சாரத்தைச் சட்டரீதியான குற்றமாக்கினாலும் இதனால் பாதிப்புற்றோருக்குச் சீர்திருத்தத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. என்றாலும் அடிப்படையான பணிகளைப் பெண்களே குடும்பங்களில் ஏற்கவேண்டியிருப்பதால் இவற்றையெல்லாம் சட்டத்தின் மூலம் மாற்றியமைத்துவிட நினைப்பது முடியாத ஒன்று. பரம்பரை பரம்பரையாகப் பெண்கள் பலாத்காரங்களினால் பாதிப்புற்று வந்திருந்தாலும் தத்தம் பாதிப்பை ஏனையோருக்கு வெளியிட அச்சம் கொண்டிருந்தனர், இப்போது திருமதி பொலானொஸ் கூறுவதுபோல் ஏறக்குறைய 80 %மான பெண்கள் ஏஎம்என்எல்ஏஇயின் சட்ட ஆலோசனைகளைப் பெற்றவர்கள். பெரும்பாலும் வன்முறைகளால்தான் பாதிப்புற்று இருந்திருக்கிறார்கள்.என்றார். "இப்போது பெண்கள் கற்பழிப்பு வன்முறைத்தாக்குதல்கள் பற்றிய முறைப்பாடுகளைத் துணிந்து முன்வந்து பதிவு செய்து நிவாரணம் தேடுகின்றனர். இது மிகவும் வரவேற்கக்கூடியது" என்று அவர் மேலும் கூறினார்.

<u>குடும்பத்திட்டம்</u>. ஒரு சாதாரண நிக்கரகுவாப் பெண் சராசரியாக ஐந்து அல்லது ஆறு குழந்தைகள் கொண்டவளாக இருக்கின்றாள். கிட்டத்தட்ட 40% மான பெண்கள் ஏற்கெனவே 14-16 வயதை...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எல்லைக்குள் அடங்குகிறார்கள். சமூக அபிலாசைகள் இருந்தாலும் குடும்பத்திட்டங்களைப்பற்றி பரவலான வெகுசனத் தொடர்புச் சாதனங்கள் பிரச்சாரம் செய்வதில்லை. எனினும் பிறப்புத்தடுப்பு வில்லைகள் பொதுநல நிலையங்கள் வாயிலாக விநியோகம் செய்யப்படுகின்றனவாயினும் அங்கு வரிசைகள் நீண்டும் பல வேளைகளில் தேவைப்படும் யாவருக்கும் இவ்வில்லைகளைக் கொடுக்க முடியாமல் தட்டுப்பாடும் ஏற்படுகின்றது. பெண்கள் இதன்காரணமாக சந்தைகளில் விற்கப்படும் பிறப்புத்தடுப்பு வில்லைகளை வாங்கி உபயோகிக்கின்றனர். அரசாங்கம் சில வகையான இவ்வில்லைகள் குறிப்பிட்ட தராதரத்தைக்கொண்டவையாக இல்லையெனவும் அவைகளை வாங்கவேண்டாமென்று எச்சரிக்கை விடுத்தும் பொதுமக்கள் தொடர்ந்தும் இவ்வில்லைகளை வாங்குவது குறைந்தபாடாக இல்லை. ஒரு அரசாங்க ஆஸ்பத்திரியொன்றில் குடும்பத்திட்டச்சிகிச்சையொன்றை மேற்கொள்ள எந்தவொரு பெண்ணுக்கும் 6 அல்லது மேலதிக குழந்தைகளும் 30க்கும் மேற்பட்ட வயதும் அத்தோடு கணவனின் பூரண சம்மதமும் தேவை. இந்தச் சிகிச்சையை ஒரு தனிப்பட்ட சிகிச்சை நிலையத்தில் செய்வதாயின் ஒரு குடியேற்றவாசிக்குக் கிட்டத்தட்ட ஆறுமாதச் சம்பளம் தேவையாயிருக்கும்.

கருவழிப்புத் தேசிய மட்டத்தில் விவாதத்துக்குரிய ஒரு அம்சமாக இதுவரை இல்லாவிடினும் ஒவ்வொரு வருடமும் பல நூற்றுக்கணக்கான பெண்கள் சட்டவிரோத கருச்சிதைவு செய்யப்படுவதால் மரணமடைகிறார்கள். இவ்வாறு கருச்சிதைவு செ மேற்கொள்ளும் பெண்களில் பெரும்பான்மையோர் வறியவர்களும் பட்டினங்களில் வதியும் அதிகக் குழந்தைகளுள்ள பெண்களுமாவர். கிராமப்புறங்களில் கருவழிப்புக்கு எதிரான அபிப்பிராயங்கள் இன்னும் தீவிரமாக இருந்துவந்தாலும் குடும்ப பாரத்தைப் பலர் பகிர்ந்துகொள்வதாலும் குறிப்பிடத்தக்க அளவில் கருச்சிதைவுகள் மேற்கொள்ளப்படுவதில்லை.

வேறுசில காரணிகளும் பிறப்புத்தடுப்பு நடவடிக்கைகளைப் பாதிக்கின்றன. காலங்காலமாக நிலவி வருகின்ற நம்பிக்கைகளும் ஆரவாரமில்லாத ஆனால் சமூக அமைட்டத்திலுள்ள சில நிறுவனங்களும் பெண் என்பவள் தாய்மை அடைவது கட்டாயமான இயற்கை நிகழ்வு என்பதை வற்புறுத்தி வருகின்றன. கத்தோலிக்க சமயத்தின் சில பிரிவுகள் நிக்கரகுவா அரசாங்கம் பிள்ளைகளைப் படிப்பிப்பதன் பொருட்டு பெற்றோரிடமிருந்து பிரிப்பதன் மூலமும் இளம் ஆண்களை 'கொந்ரா'களுடன் போர்புரிய அனுப்புவதன் மூலமும் குடும்பங்களைப் பிரிக்கவைக்கும் முயற்சியில் இயங்கி வருகிறது எனக் குற்றஞ்சாட்டுகின்றன.

தலைமுறை இடைவெளியைக் கல்வி மேலும் அகலமாக்கினாலும் பெண்கள் மென்மேலும் புதிய துறைகளில் புகக் கல்வியறிவு துணை செய்துள்ளது. ஆண்கள், பெண்களின் இப் புதிய மாற்றத்திற்கேற்ப தங்களை மாற்றிக்கொள்ளாததனால் பல நூற்றுக் கணக்கான குடும்பங்கள் பிரிந்தே வாழவேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளன. அதே நேரத்தில் புரட்சியின் புதிய [illegible] நவீன கருத்துக்களினால் உறவுமுறைகள் இறுக்கமடைந்தும் வந்துள்ளன. பெண்கள் இயக்கங்கள் பெரும்பாலும் குடும்பங்கள் பிரிந்துவாழும் நிலைமைக்கு ஒரு முக்கிய காரணமாக 'கொந்ராக்களுடன்' நடைபெறும் போரையே குற்றஞ்சாட்டுகின்றன. ஐரானி சுனிக்கா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என்ற 6 வயது மகனின் தொழிற்சங்க உறுப்பினரான ஒரு தாய் ஒவ்வொரு வருடமும் தன் கணவனைக் காண்பது சில வாரங்களே. "பெண்கள் மாதக்கணக்காக அல்லது வருடக்கணக்காக தங்களின் கணவன்மார் போரிலிருந்து விடுபட்டு வரும்வரைக்கும் காத்திருக்கின்றனர்" என்று அத்தாய் மேலும் தகவல் தெரிவித்தார். அவர் கவலையோடு "குழந்தைகள் தகப்பனைக் காணாமலும் அல்லது மூத்த சகோதரர்களைக் காணாமலும் வளர்கின்றனர்" என்று தொடர்ந்து சொன்னார்.

'சோமோசா' சர்வாதிகார ஆட்சியை எதிர்த்து நடந்த கிளர்ச்சிகளின்போது பெண்கள் இளம் சான்டினிஸ்தியாப் பெண்களுக்கு புரட்சியாளர்களுக்கு இரகசிய இமறைவிடங்களை ஏற்படுத்தி நடத்தியும் செய்திகளை இடத்துக்கிடம் எடுத்துச்சென்றும் அரசியல் வேலைகளிலும் தீவிரமாக ஈடுபட்டார்கள். கிறிஸ்தவ சமூகங்கள் இச்சர்வாதிகார ஆட்சியை எதிர்த்து ஆயுதப் புரட்சியில் மிகவும் தீவிரமாகக் கிளர்ந்தெழுந்தபோது பெண்களே அதற்குப் பக்கபலமாக இருந்தது குறிப்பிடத்தக்கது. சான்டினிஸ்தியாப் புரட்சியின்முன் இரண்டு வருடங்களாக மிகவும் தீவிரமாக இயங்கிய ஏஎம்பிஆர்ஓஎன்ஏசி என்னும் பெண்கள் அணி ஒன்றே பின்னர் சோமோசா ஜூலை 1979ல் பதவியிழந்தபிறகு ஏஎம்என்எல்ஏஇ' எனப்படும் நிக்கரகுவாப் பெண்கள் அசோசியேசனாகப் பரிமாணமடைந்தது.

'ஏஎம்என்எல்ஏஇ' இப்பொழுதும் தன் குறிக்கோள்களையும் சமூகங்களில் தன் பங்கையும் வரையறுத்துள்ளது. ஒரு ஆய்வாளர் கூறுவதுபோல "மெதுவான வருடங்கள் இனிமேல் வரக்கூடுமெனவும் அக்காலகட்டத்தில் சட்ட ஆக்கங்களிலும் மாற்றங்களிலும் மட்டுமே பெரும்பாலும் இவ் அசோசியேசன் ஈடுபடக்கூடும்" எனக் கருத்துத் தெரிவித்தார். 1984ம் ஆண்டின் கடைசி மாதங்களில் இவ் அசோசியேசன் ஒரு பரந்துபட்ட வெகுசன இயக்கமாகப் பரிணமிக்காததையிட்டு இதன் உறுப்பினர்களுக்குத் தங்களைத் தாங்களே சுயவிமர்சனம் செய்துகொள்ளும் நிலை ஏற்பட்டது. நிறைவேற்று உறுப்பினரான திருமதி ரேசா இஸ்மெரால்டா பொன்சிகா கூறுகிறார்: "பெண்களுக்குச் சில பிரச்சனைகள் நாடளாவிய ரீதியில் இருந்தாலும் ஒவ்வொரு சமூகப் பிரிவுகளுக்கெனத் தனியான பிரச்சனைகளுமுள்ளன. எங்கள் அசோசியேசன் இப்போது ஒவ்வொரு சமூகப் பிரிவையும் ஆராய்ந்து அவற்றின் தனித்தனிப் பிரச்சனைகள் தேவைகளையும் பற்றி வகுத்து நிவாரணம் தேட ஆவன செய்யும் முயற்சியில் இறங்கும்.

ஆளும் சான்டினிஸ்டா தேசிய விடுதலை முன்னணி (எவ் எஸ் எல் என்)யினரின் கட்சிக் கூட்டங்களிலும் பெண்கள் இயக்கங்கள் பற்றி விவாதிக்கப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 30 சதவிகித பேராளிகள் பெண்களாகவும் ஆளும் கட்சியின் பிரதேச நிர்வாகிகளில் 40 சதவீதத்தினர் பெண்களே எனவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. எனினும் தேசிய நிறைவேற்று அதிகாரம் கொண்ட அதிகாரம் வகுப்பது ஒன்பது பேர்; அவ்வொன்பது பேரும் ஆண்களேயாவர். பெரும்பாலான ஆளும் கட்சியின் பலம் வாய்ந்த உறுப்பினர்கள் கால்மார்க்ஸ் பாணியிலான கருத்தையே பிரதிபலிக்கின்றார்கள். அதாவது உற்பத்தித் துறையிலும் தீர்மானம் எடுக்கவும் பெண்கள் தீவிரமாய் ஈடுபடத்தொடங்கியவுடன்தான் பெண்களின் பூரண சுதந்திரம் என்பது நிலைநாட்டப்பட்டுள்ளது என்று தெளிவாகும் என்பதாகும். பெண்களின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இரகசிய இணக்கங்களைக் காண முற்பட்ட பிரெஞ்சு அரசாங்கம் தற்போது தான் இஸ்லாமிய மற்றும் அரபுத் தீவிரவாதிகளின் எந்த நிபந்தனைகட்கும் இணங்கப் போவதில்லை. என்று கூறியுள்ளது. அத்துடன் இவ்வருட இறுதியில் விடுதலை செய்யப்பட இருந்த ஜோர்ஜ் அப்-துல்லாவை விடுதலை செய்யப்போவதில்லை என்று அறிவித்ததுடன் 1982 ம் ஆண்டு பாரிஸில் கொல்லப்பட்ட அமெரிக்க அதிகாரியின் கொலை ஒன்றுடனும் அப்துல்லாவிற்குத் தொடர்பு உள்ளது என்று கூறியுள்ளது. அத்தோடு ஜோர்ஜ் அப்துல்லாவின் இரு சகோதரர்களாகிய றெபேட், மொறீஸ் ஆகியோர் படங்கள் அடங்கிய சுவரொட்டிகளை நாடுமுழுவதும் ஒட்டி அவர்கள் பற்றிய தகவல் தருபவர்களுக்கு பெருந்தொகை சன்மானத்தையும் அறிவித்துள்ளது.

அதே வேளையில் பிரான்சின் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு எல்லையிலும் பொலிஸ் அதிகாரிகளுடன் இராணுவமும் சேவைக்கு அழைக்கப்பட்டுள்ளது. சுவிற்-சலாந்து, மற்றும் ஐரோப்பிய சமூகத்திலுள்ள நாடுகள் தவிர்ந்த இதர நாட்டவர்கள் பிரான்சுக்கு இனி வருவதாயின் விசா எடுக்க வேண்டுமென அரசு அறிவித்துள்ளது. பாரிஸ் நகரில் மேலதிக அதிரடிப்படைகள் பாதுகாப்பு, தீவிர சோதனைகள் பயங்கரவாதத்திற்கு எதிராக எவ்வித வேறுபாடுமின்றிப் போராடப் போவதாக ஜனாதிபதி மித்திரோனும், பிரதம மந்திரி சிராக்கும் அறிவித்துள்ளனர்.

இவை இப்படியிருக்க இக்குண்டு வெடிப்புக்கள் மக்களிடையே பெரும் பீதியைக் கிளப்பி தமது நடமாட்டங்களை அவர்கள் கட்டுப்படுத்தியுள்ளனர். வர்த்தக நிறுவனங்கள், உணவு விடுதிகள், திரையரங்குகள் ஆகியன சமீபநாட்களில் தமது 70% வருமானத்தை இழந்துள்ளன. பிரான்ஸினில் ஏற்பட்டுள்ள இப்பய நிலை இதர ஐரோப்பிய நாடுகளுக்கும் இறுதியில் அமெரிக்காவுக்கும் விஸ்தரிக்கப்படும் என்ற கிலி இன்று பரவலாக ஏற்பட்டுள்ளது.

www.tamilarangam.net



## ஸிம்பாவே:

### அணிசேரா நாடுகளின் 8-வது உச்சி மாநாடு ஆதிக்கத்துக்கு விழும் அடுத்த பேரடி:

ஸிம்பாவேயின் ஹராரே நகரில் நடைபெற்ற அணிசேரா நாடுகளின் 8 வது உச்சிமாநாடு உலகம் முழுவதையும் தமது ஆளுமைக்குள் அடக்கி வைக்கத் துடிக்கும் ஆதிக்க சக்திகளுக்கு விழுந்த அடுத்த பேரடியாகவுள்ளது. ஏகாதிபத்தியங்களின் மிரட்டல்களை மீறி உறுதியாக உரத்த குரலில் மூன்றும் உலக நாடுகளின் முன்னணிச் சக்திகளால் வைக்கப்பட்ட கருத்துக்கள் சில.........

**இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி** :- "மோதல்களைக் கைவிடுவதன் மூலமும் அச்சம், வெறுப்பு, சமத்துவமின்மை ஆகியவற்றை இல்லாதொழிப்பதன் மூலமுமே உலகம் உயிர்வாழ முடியும். அணுப்பரிசோதனைத் தடையை அடுத்த வருடம் ஜனவரி வரை நீடிப்பதென்ற சோவியத் யூனியனின் தீர்மானத்தை வரவேற்பதுடன் அணுசக்திகொண்ட சகல நாடுகளும் இவ்விடயத்தில் சோவியத்தைப் பின்பற்றவேண்டும் எனவும் வேண்டுகிறோம். சரித்திரத்தை மாற்றியமைக்கும் ஒரு பாரிய சக்தியாக அணிசேரா இயக்கம் மாறிவிட்டது. தென்னாபிரிக்காவில் நிறவெறியும், அராஜகமும் தொடரும் வரை நமீபியாவில் தென்னாபிரிக்காவின் ஆக்கிரமிப்புத் தொடரும் வரை எங்கள் சுதந்திரம் பூரணமாகாது"

**கியூபா ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோ** :- "நமீபியா தொடர்பாக ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை மேற்கொண்ட 435 வது தீர்மானத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். அங்கோலாவுக்கு எதிரான ஆக்கிரமிப்பு அச்சுறுத்தல்களை நிறுத்த வேண்டும். முற்போக்கு அரசுக்கெதிரான கூலிப் படைகளுக்கு ஆதரவளிப்பதை நிறுத்த வேண்டும். இவையெல்லாவற்றையும் தென்னாபிரிக்க ஆட்சியாளர்கள் செய்வார்களேயானல் அங்கோலாவின் கேந்திர எல்லையோரத்தில் பாதுகாப்புக் கடமை புரியும்

www.tamilarangam.net



20 ஆயிரம் கியூபத் துருப்புக்கள் படிப்படியாக மீளப்பெறப்படும்."

**நிக்கரகுவா ஜனதிபதி டானியல் ஒட்டேகா** :- "வீரமிகு வியட்நாமில் ஒரு டசின் இராணுவ ஆலோசகர்களை முதலில் அனுப்பி பின்னர் 10 இலட்சம் படைவீரர்களை நிலைகொள்ளவைத்து அமெரிக்கா நடத்திய நாடகங்களை நாம் மறக்கக்கூடாது. அமெரிக்காவின் அபத்தங்கள் எல்லாம் வியட்நாமில் தோற்கடிக்கப்பட்டன. அங்கு செய்த அதே தவறை நிக்கரகுவாவிற்கும் இராணுவத்தை அனுப்பி அமெரிக்கா செய்தால் வீரமிக்க நிக்கரகுவா மக்கள் போராடித் தோற்கடிப்பார்கள்.

**லிபியத் தலைவர் கேர்ணல் கடாபி** :- சுதந்திரப் போராளிகளை அழித்தொழிக்க முனையும் அமெரிக்காவின் தளமாக எகிப்து மண் மாற்றப்பட்டுள்ளது. ஏகாதிபத்திய பிசாசின் நிலைக்களனாக தென்னபிரிக்கா விளங்குகின்றது. ஆயிரக் கணக்கான வீரர்களைக் கொண்ட சர்வதேச இராணுவம் ஒன்றை அமைக்க நான் தயாராக உள்ளேன். அமெரிக்காவின் காலடியில் நெருப்பை மூட்டி விடுமுகமாக, இந்த சர்வதேச இராணுவத்தின் சக்திகளை கண்டங்கள் முழுவதும் பரப்பிவிடுவேன். எங்களது முகாம்களையும், இராணுவ தளபாடங்களையும், நமீபியா, பாலஸ்தீனம், தென்னமெரிக்கா மற்றும் மத்திய அமெரிக்காவில் உள்ள புரட்சிகர அரசாங்கங்களுக்கு திறந்து விடுகிறோம்"

## சிலி:

## புரட்சிகர ஆயுதப் போராட்டம் கிளர்கிறது. சிலிக்கு விரைவில் சிவப்பு விடியல்

அடக்குமுறை இருளில் மண்டிக் கிடக்கும் சிலிக்கு விரைவில் சிவப்பு விடியலைத் தரவல்ல ஆயுதப்போராட்டம் கிளர்ந்தெழ ஆரம்பித்துள்ளது. அமெரிக்க அடிவருடியும், அடக்குமுறையாளனுமாகிய பினோசெற்றின் கொடுங்கரங்கள் 13 வருடத்திற்கு முன்னர் முற்போக்கு ஆட்சியாளர் அலண்டேயைப் படுகொலை செய்து

www.tamilarangam.net



பதவியைப் பிடித்த பின்னர் சிலிமக்களின் குரல் வளைகளை இறுக நசித்து வருவது தெரிந்ததே. ஏற்கனவே மனித உரிமை மீறல்கள் பொருளாதாரச் சீரழிவுகள் போன்ற தாக்கங்களால் வலியுடன் தவிக்கும் பினோசெற் அரசுக்கு சிலி மக்களின் ஆர்ப்பாட்டங்களும், வேலை நிறுத்தப் போராட்டங்களும் பெரும் தாக்கத்தைக் கொடுத்துள்ள இவ்வேளையில் அடக்குமுறையாளன் பினோசெற்றுக்கு எதிராக மனுவேல் றொட்ரிக் தேச பக்த முன்னணி (FPMR) எனும் புரட்சிகரக் குழுவினரல் நடத்தப்பட்ட றெக்கெற் மற்றும் இயந்திரத் துப்பாக்கித் தாக்குதலில் பினோசெற் சிறுகாயத்துடன் மயிரிழையில் உயிர்தப்பி விட்டான். ஆனால் அவனது மெய்ப்பாதுகாவலர்கள் 5பேர் கொல்லப் பட்டதுடன், 6 பேர் படுகாயமடைந்துள்ளனர். இதையடுத்து சிலியில் நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இத்தாக்குதல் சம்பவம் குறித்து FPMR விடுத்துள்ள அறிக்கையில் "மனுவேல் றொட்ரிக் தேச பக்த முன்னணி இன்னமும் துடிப்புடன் உள்ளது. இம்முறை நாம் தோல்வி கண்டுவிட்டோம். அடுத்த தடவை நாம் தோல்விகாண மாட்டோம்" எனக் கூறப்பட்டுள்ளது.

## செய்திகள்...............

* லெபனனிலுள்ள பாலஸ்தீன விடுதலை இயக்க முகாம்களின் மீதும் அப்பாவிமக்கள் வாழும் குடியிருப்புக்கள் மீதும் இஸ்ரேலிய விமானங்கள் மீண்டும் குண்டுவீச்சை நடத்தியுள்ளன.
* மூன்றாவது உலகநாடுகளிலிருந்து அடக்குமுறை காரணமாக ஐரோப்பிய நாடுகளுக்குத் தப்பி வரும் அகதிகள் மீது புதிய ஒடுக்குமுறைகளை விதிப்பதற்கு ஐரோப்பிய நாடுகள் தயாராகின்றன. மேற்கு ஜேர்மனியின் அரசே இதில் முன்னணியில் நிற்கிறது.
* தென்னாபிரிக்காவிற்கெதிரான பொருளாதாரத் தடைகளை அமுல் படுத்த வேண்டும் என்ற அமெரிக்க செனட், மற்றும் காங்கிரசின் தீர்மானத்தை றேகன் தனது சுய வீட்டோ அதிகாரமூலம் இரத்துச் செய்ய உள்ளான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



* சூடானின் தென்பகுதியிலுள்ள மக்களின் விடுதலைக்காகப் போராடிவரும் சூடான் மக்கள் விடுதலைப் படை ( SPLA) சமீபகாலங்களில் பெரு வெற்றிகளைப் பெற்று வருகிறது.

* பாகிஸ்தானின் கொடுங்கோல் ஆட்சியாளன் ஸியா உல் ஹக் அரசால் கைது செய்யப்பட்ட பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவி பெனாசிர் பூட்டோ நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

* கராச்சியில் இடம்பெற்ற விமானக் கடத்தலை முறியடிப்பதில் பாகிஸ்தான் படைகள் தவறாக நடந்து கொண்டன. என்று இந்தியப் பிரதமர் குற்றஞ் சாட்டியுள்ளார். இச்சம்பவத்தில் 16 பயணிகள் கொல்லப்பட்டனர். உயிர் தப்பிய பயணிகள் பலரும் ராஜீவின் கருத்தையே கூறியுள்ளனர். ஆனால் சர்வாதிகாரி ஸியாவும், அமெரிக்க அரசும் பாகிஸ்தான் படைகள் நடந்த முறையைப் பாராட்டியுள்ளன.

* இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கெதிரான கொலை முயற்சியொன்றிலிருந்து அவர் மயிரிழையில் உயிர்தப்பியுள்ளார். மகாத்மா காந்தி ஞாபகார்த்த வைபவம் ஒன்றில் கலந்து கொண்டபோது நடந்த துப்பாக்கி ஏந்திய இளைஞன் ஒருவனின் தாக்குதலில் இந்தியப் பிரதமர், ஜனாதிபதி, மற்றும் உயர் அதிகாரிகள் பலர் உயிர் தப்பியுள்ளனர்.




* சோவியத் தலைவர் கொர்பச்சேவுக்கும் அமெரிக்க ஜனாதிபதி றேகனுக்குமிடையிலான உச்சி மாநாடு இம்மாதம் 11ம் 12ம் திகதிகளில் ஐஸ்லாந்தில் நடைபெறவுள்ளது. இம்மகாநாட்டில் ஆயுதப் பரிகரணக் கட்டுப்பாடு, அணு ஆயுதப் பரிசோதனைகளை நிறுத்தல், நட்சத்திரப்போர் திட்டத்தைக் கைவிடல், ஐரோப்பாவில் நிலை நிறுத்தப்பட்டுள்ள ஏவுகணைகள், கிழக்கு - மேற்கு உறவுகள் ஆகிய விடயங்கள் தொடர்பான பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும்.

www.tamilarangam.net

# தோழர்களே இதோ உங்களுக்கு! ஓர் எழுத்துக் கடமை

ஈழப்போராட்டத்தில் நாம் பல்வேறுபட்ட இன்னல்களை இன்று எதிர்கொண்டிருக்கின்றோம். இவற்றில் எமது சிந்தனைகளை மழுங்கடிக்கும் மசாலத்தனமான சஞ்சிகைகளும் எழுத்துக்களும் ஐரோப்பாவிலும் எம்மைத்துரத்திவந்து குவிந்துகிடக்கின்றன. ஏற்கனவே புதியநோக்குகளையும், புரட்சிகர ஆக்கங்களையும் வாசிக்கமாட்டோம் என்று சபதம் செய்தவர்களாய் கூடிச்செல்லும் இளைஞர்களின் கவனங்கள் இவற்றால் திசைதிருப்பப்பட்டு சீரழிக்கப்படுகின்றன. நாம் ஐரோப்பாவிலே உல்லாச வாழ்க்கை நடத்த வந்த இனமல்ல. அடக்குமுறை அரசினால் அகதிகள் ஆக்கப்பட்டவர்கள். அடித்து விரட்டப்பட்டவர்கள். என்பதை நாம் மறந்துவிட முடியாது. நாம் எமது விடுதலைக்காகப் போராடும் இனம் என்பதை மனதில் இறுக்கமாகப் பதித்து, விடுதலைக்கான வழிகளை நோக்கிய பார்வைகளை ஆராய வேண்டும். தேடலில் இறங்கவேண்டும்.

நீண்டதும் கடினமானதுமான ஈழப்போராட்டத்தை தொலைநோக்குடனும் தீட்சண்யத்துடனும் நோக்கும் தோழர்களின் சிந்தனைகளுக்கு, எழுத்துக்களுக்கு இப்போது 'தமிழ்முரசு' களம் அமைத்துத் தருகிறது. "நாம் எதிர்நோக்கும் சில அரசியல் முகங்கள்" என்ற தலைப்பில் தோழர் சுகுனல் தொகுத்துத் தரப்பட்டிருக்கும் இவற்றைத் தலையங்களாகக் கொண்ட கட்டுரைகளை 'தமிழ்முரசில்' எழுதுமாறு வேண்டுகின்றோம். ஈழவிடுதலைப்போராட்டத்தை சரியான திசைவழியில் நகர்த்த முயலும் எமது துளியான பங்களிப்புக்கு நீங்களும் துணை வருவீர்கள் என்று நம்புகின்றோம். உங்கள் ஆக்கங்கள் ஈழவிடுதலைப் போராட்டத்துக்கான உங்கள் வரலாற்றுக் கடமைகளில் ஒன்று என்பதையும் நீங்கள் மறந்துவிடாதீர்கள். பின்வரும் தலைப்புகளில் நீங்கள் எழுதும் கட்டுரைகள் தொடர்ந்து வரும் 'தமிழ்முரசு' இதழ்களில் பிரசுரமாகும். .... ஆசிரியர் ....

## ாம் எதிர்நோக்கும் சில அரசியல் முகங்கள்


1. எமது விடுதலை குறித்த தற்போதுள்ள சக்திகளின் தொலைதூரப் பார்வை.
2. அவற்றின் தற்போதைய செயற்பாடுகள் எமது விடுதலையின் மீது ஏற்படுத்தும் தாக்கங்கள்.
3. எமது மக்களிற்கும் அவற்றிற்குமிடையில் உள்ள அரசியல் பொருளாதார பிணைப்புகள்.
4. தற்போதுள்ள சக்திகளின் செயற்பாடுகளில் எமது மக்கள் அரசியல் பொருளாதா மீது கொண்டுள்ள கருத்து.
5. ஈழவிடுதலை குறித்த இந்தியப் பார்வை.
6. ஈழவிடுதலையில் வெளிச் சக்திகள் இந்தியாவை எவ்வாறு நோக்குகின்றன.
7. ஈழவிடுதலையில் இந்தியாவின் அபிலாசைகள்.
8. ஸ்ரீலங்கா அரசிற்கும் இந்திய அரசிற்குமிடையில் உள்ள உறவு.
9. எமது விடுதலையின்போது இந்தியா ஏற்படுத்தும் தாக்கங்கள், (விரிவாக) எமது அமைப்புக்கள்மீது நடாத்தும் அரசியல் அறுவடை.
10. எமது அமைப்புகள் சர்வதேச ரீதியில் கொண்டுள்ள உறவு.
11. எமது சக்திகளுக்கும் இந்திய அரசிற்கும் இடையில் உள்ள உறவு (தத்துவார்த்தரீதியில்)
12. எமது பல்வேறுதரப்பட்ட சக்திகள் இந்தியாவின் பல்வேறு அரசியற் சக்திகளுடன் கொண்டுள்ள உறவு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



13. சர்வதேசரீதியாக இந்திய அரசு எதிர்நோக்கும் அரசியற் பிரச்சனைகள்.
14. இந்தியாவின் அரசியல் தளம்பலினால் அங்குதோன்றியுள்ள போராட்டங்கள்.
15. இலங்கை முற்போக்குச் சக்திகள் இந்திய அரசியலோடு எதிர்காலத்தில் கொண்டிருக்கும் நிலையான உறவு.
16. அமெரிக்க ஏகாதிபத்தியம் ஈழவிடுதலையின் மீது கொண்டுள்ள சமீபகாலத்திய கருத்து
17. தென்கிழக்காசிய சூழலில் இலங்கை வகிக்கும் அரசியல் முக்கியத்துவம்.
18. சோவியத் ரஷ் யாவின் இந்தியா தழுவிய பார்வை.
19. சோவியத்ரஷ்யா ஈழவிடுதலைப்போராட்டம் பற்றியும் தற்போதுள்ள போராட்டச் சக்திகள் குறித்தும் கொண்டுள்ள ஆழமான கருத்து.
20. புதிய சனநாயகம் பாதை பற்றி.
21. உறுதியான அரசியல் வரைவு.
22. உலக சமாதானத்திலும் சுபீட்சத்திலும் ஈழவிடுதலையினதும் ஈழத்தினதும் முக்கியத்துவம்
23. அமெரிக்காகொண்டுள்ள கருத்தில் ஈழவிடுதலையில் ஏற்படும் தாககங்கள். -சுகன்



www.tamilarangam.net

# கடைசிப்பக்கம்

எங்கெல்லாம் மனிதன் சுதந்திரத்திற்காகவும், விடுதலைக்காகவும் போராடுகிறனோ அங்கங்கே அது தொடர்பான ஆக்க இலக்கியங்கள் செழிப்பான வளர்ச்சியுடன் மேலோங்கிவிடுகிறது. இது மீண்டும் மறுதலையாக அந்தந்த நாட்டு விடுதலைப்போராட்டங்களை மேலும் அதிகமான விடுதலை உணர்வுடன் வளர்த்துவிடுவதுடன் முழு மக்களையும் விடுதலைக்காக வளர்த்துவிடுதலைக்கான போராட்டத்தில் இறுகப்பிணைத்தும் விடுகிறது.

இந்த வளர்ச்சிப்போக்கு விடுதலைக்காகப் போராடுகிற ஆசிய ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் எங்கும் வியாபித்திருப்பதை உணர முடியும். ஆனல் ஒரு உண்மை, கலை இலக்கிய வடிவங்கள் எல்லாவற்றிலும் கவிதையே இக்காலகட்டங்களில் சிறப்பான வளர்ச்சிபெற்றுவிடுகிறது. போர்க்காலத்தில் மனிதனுக்குப் பேச நேரமிருப்பதில்லை. வார்த்தைகளை விரயம் செய்யமாட்டான். சாதாரண வார்த்தைகளால் சொல்லமுடியாத உணர்வுகளை மிக உயர்ந்த சிக்கனமான வார்த்தைகளால் கவிதையாக எழுதிவிட்டுப்போய்விடுகிறன். மனிதனது முதல் படைப்புக் கவிதை தானே? நமது காலகட்டத்தில் நமது அண்டை நாடான பாகிஸ்தானில் தோன்றிய உலக மகாகவிகளில் ஒருவரான பைஸ் – அஹமட் – பைஸ் (FAIZ-AHAMED-FAIZ ) பற்றி அறிந்து கொள்வது தெற்காசியவிடுதலையுடன் இணைந்துள்ள எமது போராட்டத்திற்கும் உதவியாகவே இருக்கும்.

தமது 73ஆவது வயதில் (20நவ 84ல்) லாகூரில் காலமான இவர் இந்திய உபகண்டத்திலும் ஏனைய மூன்றும் உலக நாடுகளிலும் "சுதந்திரத்திற்குப்" பிறகும் சுயமரியாதையை இழந்து விடுதலைக்காகப் போராடிக்கொண்டிருக்கிற கோடிக்கணக்கான மக்களின் உணர்வுகளை முழு உலகிற்கும் வெளிக்கொணர்ந்தார்.

கலை கலைக்காகவே என்ற கோட்பாட்டை சிறுவயதிலே நிராகரித்த இவரது வசன கவிதைகள் பாமர மக்களாலும் கற்றோர் குழாத்திலும் இணைந்து உணரப்பட்டவைகள். தனது சமூக, அரசியல், இலக்கிய நடவடிக்கைகளுக்காகப் பலமுறை சிறைசென்ற இவர் தனது சிறப்பான கவிதைகளை சிறைக்கூடத்திலேயேபடைத்துள்ளார். சுதந்திரம்– நீதி– சமூகமாற்றம் என்ற அடிப்படை உண்மைகளுக்காக போராடிவந்த கவிஞர் பைஸ் பூட்டோ இராணுவச் சதியால் தூக்கியெறியப்பட்டபின் 1977 லிருந்து 82 வரை பெய்ரூட்டில் வாழ்ந்துகொண்டு ஆசிய – ஆபிரிக்க எழுத்தாளர்களின் சஞ்சிகையான "LOTUS" ஐ நடத்திவந்தார்.

www.tamilarangam.net



1982ல் மீண்டும் நாடு திரும்பிய இவர் பாகிஸ்தானின் இராணுவ ஆட்சிக்கெதிராக மக்களை இணைப்பதில் இறுதிவரை உழைத்தார்

1982ல் லெனின் பரிசு மூலம் உலகம் இவரைக் கௌரவித்தது. பலமுறை நோபல் பரிசுக்கு இவரது பெயர் சிபார்சு செய்யப் பட்டபோதும் இவரது தீவிர இடதுசாரிப் போக்கிற்காக மறுக் கப்பட்டே வந்துள்ளது.

இவரது தேசிய சர்வதேசிய உணர்வைப் புரிந்துகொள்ள இவரது கவிதைகளே சான்று.

பாலஸ்தீனக் குழந்தைக்கு தாலாட்டு

அழாதே பாப்பா
நீண்ட அழுகைக்குப்பின் உன்அம்மா
இப்போதுதான் தூங்குகிறாள்

அழாதே பாப்பா
கொஞ்ச நேரத்திற்கு முன்தான்
உன் அப்பா

தூக்கத்தையே விட்டுப் போய்விட்டார்
அழாதே பாப்பா
வண்ணத்திப்பூச்சியை கனவுகளில்

துரத்தித்திரிந்த உனது சகோதரன்
வேறொரு நாட்டிற்குப் போய்விட்டான்
அழாதே பாப்பாா
உனது அக்காவின்
திருமண வண்டியும்
தெரியாத ஒரு நாட்டிற்குப் போய்விட்டது
இறந்த சூரியனுக்கு
இறுதிக்குளிப்பாட்டும் முடிந்துவிட்டது
சந்திரனும் சற்று முன்புதான்
புதைக்கப்பட்டது
அழாதே பாப்பா
அம்மா, அப்பா, அக்கா, அண்ணை
சந்திரன், சூரியன், எல்லோரும்
உன்னையே பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்,
நீ அழுதால்
அவர்கள் உன்னை மேலும் அழவைப்பார்கள்
ஆனால்
நீசிரித்தால், அநேகமாக
அவர்கள் எல்லோரும் – ஒருநாள் – மாறுவேடத்தில்
உன்னுடன் விளையாட வருவார்கள்

www.tamilarangam.net



**பேசு.**

பேசு – உன்னுடைய உதடுகள் சுதந்திரமானவை
பேசு – உன்னுடைய நா இன்னும் உன்னுடையதே

இந்த அற்புதமான உடல்
இன்னும் உன்னுடையதே

பேசு – உன்னுடைய வாழ்க்கை இன்னும் உன்னுடையதே
உலைக்களத்தில் உட்பக்கத்தைப் பார்
தாவிவருகின்ற தீப்பிளம்பு,
சூடாகிச் சிவந்த இரும்பு.

பூட்டுக்கள் வாய் திறக்கின்றன.
சங்கிலிகள் உடைகின்றன.

பேசு – இன்னும் சொற்பநேரமே இருக்கிறது.
சொற்ப நேரம்தான்
ஆனல்
அதுவே போதுமானது
நேரம் போதும்.

உடல் அழிந்துவிடுமுன்
நாக்கு செயலிழந்து போகுமுன்
பேசு – உண்மை இன்னும் வாழ்கின்றது
சொல்லி முடித்துவிடு சொல்லவேண்டியதை

ஒரு உயரமான மரத்தின் சரித்திரம்.

இப்படித்தான் இருக்கிறது
அங்கு ஒன்றுமேயில்லை இப்போ
சூரியனும் இல்லை, சந்திரனும் இல்லை
இருளும் இல்லை விடிவும் இல்லை
சமுத்திரமான கண்களில் எந்த மோகமும் இல்லை
துன்பத்துறைமுகத்தில் எந்தக் கப்பலும் இல்லை
அநேகமாக இது எல்லாம்
ஒரு மாயைத் தோற்றமோ

ஒரு உயரமான மரத்தின் சரித்திரம்
கொலைக்கள வீதியில் நடக்கும்
தனிமைச் சுழற்சியோ

இந்தப் பாலைவன பசுந்தரைக்கு
எவரும் இப்போ வரமாட்டார்கள்

இந்த நீரோட்டத்தை
எவரும் இப்போ பருகமாட்டார்கள்
எல்லாத் தொடர்புகளும் அறுகிறது

www.tamilarangam.net


எல்லா நட்புகளும் புதைக் ப்படுகின்றன
நடந்தவற்றிலெல்லாம்
இதுவே மிக மோசமானது

துணிவு – எனது இதயம்
இதுகூடப் போய்விடும், ஆனால்
நம்பிக்கை இழந்துவிடவில்லை
வாழ்வதற்கான வாழ்க்கை ஒன்று இருக்கவே இருக்கிறது.

கவிதைகள் ஆங்கிலத்திலிருந்து தமிழில் பார்த்தசாரதி
மூலம் உருது நன்றி : RACE & CLASS 86 (SUMMER.

---

தோழர்களே!

பிரவாகமாய் பெருக்கெடுத்திருக்கும் ஈழ விடுதலைப் போராட்டம் இன்று நமது ஆக்கிரமிப்பு எதிர்த்து அனைத்து திசையிலும் போரைக் கொடுத்து வருகிறது. இந்தவேளையில் எதிர்த்து நேரான புரட்சிகர ஆயுதப் போராட்டத்தை மாத்திரமன்றி நமது தேசத்தின் தேசிய சேவையையும் பொறுப்பேற்று போராட்டத்தின் புரட்சிகரப் பக்கங்களை புரட்டி வரும் ஈழ மண்ணின் புரட்சிகர விடுதலை முன்னணியின் கரங்களைப் பலப்படுத்துங்கள். உங்கள் வரலாற்றுப் பங்களிப்பைச் செலுத்துங்கள். உங்கள் அனைத்து ஆதரவையும் EPRLF வேண்டி நிற்கிறது. தொடர்புகளுக்கு....

EPRLF (FRANCE)
10, RUE DES MARTYRS
75009 - PARIS.

தொலைபேசி : 48-74-98-30.

www.tamilarangam.net



## ட்டிடக் காட்டுக்குள்

ரியன் கிழவனுகி
ங்கிக் கிடந்தது
னிப் பூக்களைச் சூடினாலும்
ரங்கள் விதவையாகி
ழுது வடிந்தது
டுப்புக்குவியலுக்குள்
வெள்ளைமுகங்கள்
வெத்து சிணுங்கியது
கழ் கொண்ட செயினின் ஆற்றுக்
கரையோ தூங்கி வழிந்தது.
ட்டிடக் காட்டுக்குள்,
அந்தக் காலத்தில் தான்
ான் புகுந்தேன்.

று குருவி வீடு கட்டும்
தென்னோலை பாட்டிசைக்கும்
ரியப்பெடியன் செவ்வரத்தைப்பூவை
ணரும், என் ஊரின்
ருப்பிழந்தேன்.


அலை எழுப்பும் கடலோரம்
ஓர் வீடும்
செம்மண் பாதையோரம்
ஓர் தோட்டமும்
கனவுப் பணம்தேட
கடல் கடந்தோம்.
நானும்; நாங்களும்;
அகதித் தரையில்
முகமிழந்தோம்.
வாழ்க்கை கடினமாகின்றது
ஒவ்வொன்றும் காலதாமதமாகின்றது.

என் தேசத்திலோ! எம்மக்கள்!
வாழ்வதற்காக வாழ்வை
இழக்கின்றார்கள்
அக்கினியை கையிலெடுத்த
என் தம்பியோ!
தன்னையே சுட்டுப்பார்க்கிறான்.
தேற்றிக் கொள்வேன்;...

பனிப்பாறைக்குள்
முளைகள் கிளம்பும்
எங்கள் அர்ச்சுனருக்கும்
ஒரு கண்ணன் கிடைப்பான்
எனதூரில் என் மகனுக்கு
பாரீசில்
நான் வாழ்ந்த கதை
சொல்வேன்.

— செல்வம் —

www.tamilarangam.net



வெளியீடு: ஈழ விடுதலைப் பேரவை, பிரான்சு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்